# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 1 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 10

OCTOBER 2017 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

## கர்த்தருக்குள் அன்பானவர்களே!



இயேசுகிறிஸ்துவின் பெயரால் உங்களை வாழ்த்துகிறேன். கடந்த செப்டம்பர் மாத ஜாமக்காரனை படித்தவர்கள் குறிப்பாக CSI கிறிஸ்தவர்கள் மத்தியில் பெரும்பாதிப்பையும், மன வேதனையையும் உண்டாக்கிவிட்டது என்பதை வாசகர்கள் மூலமாக கேள்விப்பட்டேன்.

**CSI சபைகள் அரசாங்க விசாரணை** வட்டத்தில் வந்தது என்பது மிகவும் **பழமையான செய்திதான்.** ஆனால் செய்திகளை ஆங்கில பத்திரிக்கை வாயிலாக வாசித்த CSI சபை **ஆயர்கள்,** திருமண்டல DC மெம்பர்கள், பிஷப்மார் இவர்களுக்குள்ளே ஒரு சலனமும் காணப்படவில்லையே? **ஒன்றுமே நடக்காததுபோல** அமைதி காக்கிறார்கள் என்பதால் தான் நம் CSI சபையை உண்மையாக நேசிப்பவர்களுக்காக ஆங்கில பத்திரிக்கை செய்தி களை அப்படியே வெளியிட்டேன். CSI சபையின் இரட்சிப்புக்காக பாடுபடுபவர்களும் CSI சபையை நேசிப்பவர்கள் யாவரும்,**உள்நாட்டில்** அல்லது **வெளிநாட்டில்**உள்ள 24 டையோசிஸ்சிசை சேர்ந்த CSI சபைகளில்உள்ள மனந்திரும்பின அனுபவம்உள்ளவர்கள் ஒன்றுகூடி ஒரு **குறிப்பிட்ட நாளை** தேர்ந்தெடுத்து வாரம் **ஒருமுறை** அல்லது இரண்டு வாரத்துக்கு ஒருமுறை கூடி CSI சபைகளுக்காக ஜெபிக்கக் கேட்டுக்கொண்டேன். இப்படி ஜெபிக்கக்கூடும் நம்மை போன்றவர்களின் ஜெபம் நிச்சயமாக கேட்கப்படும். **பெயர் கிறிஸ்தவர்களாக** இருக்கும் CSIசபையில்உள்ள மற்ற **பெரும்பாலானவர்கள்** கூடி ஜெபித்தாலும் அது கேட்கப்படாது!. ஆகவேதான் இந்த பிரச்சனைகளை வாசகர்களில் உள்ள உண்மை விசுவாசிகளிடம் பகிர்ந்துக்கொண்டேன். மற்றவர்கள் நான் இப்படி **பத்திரிகை** வாயிலாக ஜெபிக்க கேட்டுக்கொண்டதைக்குறித்து CSIக்கு **அவமானத்தை** உண்டாக்குவதாக கருதினால்! அதைக்குறித்து நான் விமர்சிக்க நான் விரும்பவில்லை.


# OCTOBER 2017

கடந்த காலங்களில் அனைத்து 24 CSI டையோசிஸ்களில் உள்ள CSI சபைகளில் நடந்த என் கூட்டங்களில் ஒரு பிரசங்கத்திலும் இந்த பத்திரிகை செய்திகளைப்பற்றி நான் பிரசங்கத்ததில்லை. ஜெபத்துக்காக யாரிடமும் இதை பகிர்ந்துக்கொண்டதுமில்லை, பொது மைதானத்தில் அப்படி நான் பேசியிருந்தால் மட்டுமே, அது CSIக்கு அவமானத்தை உண்டாக்கும் வகையில் பேசினேன் என்று கூறமுடியும். ஆனால் வாசகர்களாகிய உங்களிடம்தான் இந்த விஷயத்தில் நீங்கள் நிச்சயம் ஜெபிப்பீர்கள் என்று உங்களை நம்பி இதை நான் பகிர்ந்துக் கொண்டேன்.

நான் எழுதியதை வாசித்து எங்கெங்கு CSI **சபை விசுவாசிகள்** இந்த குறிப்பிட்ட பிரச்சனைக்காக கூடி ஜெபித்தீர்கள் என்பதை எனக்கு அறிவியுங்கள். எப்போது?, எந்த நேரத்தில்! CSI இரட்சிப்புகாக ஜெபிக்க கூடுகிறீர்கள் என்பதை எனக்கு அறிவித்தால் அதை நான் ஜாமக்காரனில் வெளியிடுவேன். அதை வாசிக்கும் உண்மையான சிஎஸ்ஐ விசுவாசிகள் யாவரும் நீங்கள் ஜெபிக்கும் அதே நாள், அதே நேரத்தில் மற்ற வாசகர்களும்கூடி ஜெபிக்க முயலுவார்கள். நானும் உங்கள் ஜெபத்தில் ஒருமனப்பட்டு நான் இருக்கும் இடத்திலேயே உங்களோடு இணைந்து ஜெபிப்பேன்.

இயேசு சொன்னார், மத். 18:19 **"உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்த காரியத்தை குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்"** என்றார். வாக்கு மாறாத நம் தெய்வம் அப்படியே செய்வாராக. ஆமென்.

# மகாத்மா காந்தி



இந்திய சுதந்திர **தியாகிகளின் தந்தை** என்று அழைக்கப் படுகிற **காந்திஜி** அவர்களை ஒவ்வொரு அக்டோபர் மாதமும் நாம் நினைவு கூறுகிறோம்.

தென்ஆப்பிக்காவில் மகாத்மா காந்தி அவர்கள், வக்கீல் தொழில் செய்தபோதுதான் **இயேசு கிறிஸ்துவை** தெய்வமாக அறிந்து கொண்டார். புதிய ஏற்பாட்டு வேதபுத்தகம் எப்போதும் அவர் கையில் இருக்கும். தன் வாழ்க்கை சரித்திரத்தில் அவைகளைக்குறித்து எழுதும்போது புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவின் **மலை பிரசங்கம்** என் மனதில் பெரும் பக்தியையும், பாதிப்பையும் உண்டாக்கியது என்று எழுதியிருக்கிறார்.

ஆப்பிரிக்காவில் காந்திஜீ அவர்கள் கிறிஸ்துவ ஆராதனைக்கு சென்று, ஆராதனையில் கலந்துக்கொள்ள தன்னோடு ஆப்பிரிக்க **கருப்புஇன கிறிஸ்துவ** விசுவாசியையும்கூட அழைத்துப்போனார். ஆனால் வெள்ளையர்கள் அவர்களை வெளியே போகசொல்லி கருப்பு இனத்தவர்கள் மட்டும் ஆராதிக்கும் கிறிஸ்துவ ஆலயத்துக்குபோங்கள் என்றும் இங்கு அமரக்கூடாது என்று முகத்தில் அறைந்ததுபோல் கூறிவிட்டார்கள். அது காந்தி அவர்கள் மனதில் பெரும் ஏமாற்றத்தையும், அவமானத்தையும் உண்டாக்கியது.

நம் பாரத தேசத்தில் கோடிக்கணக்கில் வாழும் **பல ஜாதி மக்கள்** தங்களுக்குள் கொண்ட ஜாதி வெறியை நீக்க, **இயேசு கிறிஸ்துவையும்** அவர் உபதேசத்தையும் இந்தியர்களுக்கு அறிமுகப்படுத்த நினைத்த காந்தியின் அந்த நல்ல திட்டத்தை **ஆப்பிரிக்க வெள்ளைக்கார** கிறிஸ்தவ சபையினர் கெடுத்துவிட்டனர்.

**கருப்பு-வெள்ளை** என்ற நிறவெறிக்கொண்ட இந்த ஆப்பிரிக்க நாட்டு கிறிஸ்தவ சபைகளில் இப்படி ஒரு **இனவெறியும் நிறவெறியும்** நிறைந்து இருக்குமானால் நான் **இந்துவாகவே** இருந்துவிடுகிறேன் என்று அன்று காந்தி அவர்கள் தீர்மானித்துவிட்டார். காந்தி அவர்களுக்கு ஆப்பிரிக்காவில் **கிறிஸ்துவின்** இரத்தத்தைக்குறித்தும், **மனம்திரும்புதலைத்**குறித்தும் அன்று ஆப்பிரிக்காவில் இருந்த வெள்ளைக்கார **கிறிஸ்துவ பாதிரிகள்** அல்லது ஊழியர்கள் யாரும் தெளிவாக காந்தி அவர்களுக்கு அறிவிக்க முயற்சிக்கவில்லை. அதனால் காந்தி என்ற அந்த ஒரு ஆத்துமா கிறிஸ்துவைவிட்டு விலகிப்போனது எத்தனை துக்ககரமான விஷயம்.

ஆனால் **இந்திய கிறிஸ்தவர்களும்**, இந்த ஜாதி விஷயத்தில் ஆப்பிரிக்க கிறிஸ்தவ **வெள்ளையர்கள் மாதிரிதானே நடந்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு இந்தியர்களுக்கும்** பெருத்த வித்தியாசம் இல்லையே இந்திய கிறிஸ்தவர்கள் தங்கள் சபைகளில் நடக்கும் **திருமணங்களில்** சபை ஊழியர்கள் தேர்ந்தெடுப்பில், பிஷப்மார் தேர்ந்தெடுப்பில், **ஜாதி அடிப்படையில்** தெரிந்தெடுக்கும் தங்கள் செயல்களால் சாட்சியை **கெடுத்து**கொண்டார்கள். **ஜாதி விஷயத்தில்** நம்மவர்களின் யோக்கியதை சிரிப்பாய் சிரிக்கிறதே!.

அது **CSI, லூத்தரன்** ஆகிய சபைகளிலும், **பெந்தேகோஸ்தே** சபைகளிலும் இந்த **ஜாதி** என்ற **பிசாசு** எந்தனையாய் **சபை விசுவாசிகளுக்குள்** புகுந்து விளைாடுகிறது!. கேரளாவிலும் **சுரியாணி** என்ற உயர்ஜாதி கிறிஸ்தவர்கள்,**தலித்** கிறிஸ்தவர்கள், **நாடார்** கிறிஸ்தவர்கள் என்றும், **ஆந்திராவிலும்,கர்நாடகாவிலும் தலித்,நாயுடு,ரெட்டி,லிங்காயத், உடையார்** இப்படி எத்தனை எத்தனை ஜாதி பெயர்களில் பலவித ஜாதிகள் சபைக்குள் புகுந்து பேயாட்டம் ஆடுகிறதே!.

ஜாதி வெறிக்கொண்ட இவர்கள் எல்லாரும் **ஆலயம் கட்டி** கொடுக்கிறார்கள், **அனாதை** இல்லம், **முதியோர்** இல்லம், **மிஷனரி** பணி என்ற பெயரில் **ஆத்தும ஆதாய** ஊழியத்தின் எண்ணிக்கையில் போட்டி போட்டு ஊழியமும் செய்கிறார்கள்!. ஆனால் ஜாதியை மட்டும் விடுவதில்லை. அப்படியானால் என்ன கிறிஸ்தவர்கள் இவர்கள்?. இதில் **உபவாச ஜெபங்கள், அக்கினி அபிஷேக கூட்டங்கள்** என்ற பெயரில் இவர்களின் போலி பக்தியை வெளிப்படுத்துகிறார்கள். **இதோடு அன்னிய பாஷை** என்ற பெயரில் **துள்ளல்** வேறு, இப்படிப்பட்ட இவர்கள் பரலோகம் போகமுடியுமா? நிச்சயம் முடியாது!.

இப்படிப்பட்ட **ஜாதி** வெறியுள்ள அனைத்து கிறிஸ்தவர்களும் **தோல்** உறிக்கப்படாத ஆடுகளாய் இருக்கிறார்கள். இவர்கள் இரட்சிக்கப்பட்டு ஆத்மஆதாயம் செய்தாலும் **ஜாதி வெறியை** தங்களிலிருந்து நீக்காமல்போனால் **ஜாதி** என்ற **தோல் உரிக்கப்படாத நிலையில்** இவர்கள் பலி பீடத்திலேயே படுத்துகொண்டாலும் அந்த ஆடு **கர்த்தருக்கு உகந்த பலிஅல்ல!.**

கர்த்தர் அந்த **பலிபீடம்** வரை வந்த அப்படிப்பட்ட அந்த **கிறிஸ்தவர்களை** அல்லது தோல் **உரிக்கப்படாத** அந்த ஆட்டை **கர்த்தர் ஒருகாலும் அங்கீகரிக்கமாட்டார்.** அவர்களைப் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளவும்மாட்டார்!.

40 வருடம் 80 வருடம் நல்ல ஒரு கிறிஸ்துவ விசுவாசி என்று பெயரெடுத்து என்ன பயன்.போச்சே! நீங்கள் **வாழ்ந்த வாழ்க்கை, நீங்கள் செய்த தியாகம்,கொடுத்த காணிக்கை, ஊழியம் எல்லாம் நஷ்டம்தான்.**

மகாத்மா காந்தியின் நினைவு நாளில் இவைகளைப்பற்றி அனைத்து சபை கிறிஸ்தவ மக்களும் சிந்தித்து வெட்கப்பட்டு அழுங்கள், மனந்திரும்புங்கள். நம் தேவன் கிருபையுள்ளவர். இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவர். நிச்சயம் நம்மை மன்னித்து உயிர்ப்பிப்பார்.

❖ அனைத்து சபைகளும் இதை குறித்து சிந்திக்குமா?

❖ வாசகர்களாகிய உங்கள் ஜெப குறிப்புகளுக்காக தொடர்ந்த ஜெபிக்கிறேன்.

❖ **உங்கள் ஜெப குறிப்புகளை** தொலைபேசியில் கூறுவதைவிட **கடிதம் மூலம்** எழுதி அறிவித்தால் நான் செல்லும் இடமெல்லாம் அந்த ஜெபகுறிப்புகளை நான் எழுதி என் கையில் எழுதி வைத்துக்கொண்டு தொடர்ந்து உங்களுக்காக ஜெபிக்கமுடியும்.

❖ கல்லுரி. பள்ளிக்கூடம், டிரைனிங் ஸ்கூல் ஆகியவற்றிக்காக கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வாசகர்களாகிய உங்களுக்கு ஏராளமான **பண செலவு** இருக்கும் என்று எனக்கு தெரியும். அப்படியிருந்தும் நீங்கள் தொடர்ந்து ஜாமக்காரன் ஊழியத்தை காணிக்கைகளால் தாங்கினீர்களே!. தேவனை துதிக்கிறேன். இப்படிப்பட்ட வாசகர்களை எனக்கு தந்த தெய்வத்தை நன்றியுடன் துதிக்கிறேன்.

❖ கடந்த மாதங்களில் நடந்த எல்லா என் கூட்டங்களையும் கர்த்தர் அபரிதமாக ஆசீர்வதித்தார். ஒரு கூட்டம்கூட சோடை போனதில்லை. **சுகம் பெற்றவர்களின் சாட்சிகள்** ஏராளம். பிரச்சனைகளிலிருந்தும், கடன்களிருந்தெல்லாம் கர்த்தரால் காப்பாற்றப்பட்டவர்கள் எழுதிய சாட்சிகளுக்காக தேவனை துதிக்கிறேன்.

❖ **வசனத்தை கேட்கிறவர்களாக** மாத்திரமல்ல அதன்படி செய்கிறவர்களே **பாக்கியவான்கள்** என்ற வசனத்தின்படி என்னிடம் ஆலோசனை கேட்டு ஜெபித்துக் கொண்டவர்கள். வசனத்துக்கு கீழ்படிந்ததால் அவர்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை அறிந்து பெருமையடைகிறேன். கர்த்தரையும் துதிக்கிறேன்.

**"என்னை கனம் பண்ணுகிறவனை நான் கனம் பண்ணுவேன், என்னை அசட்டை செய்கிறவர்கள் கனவீனப்படுவார்கள்."** 1 சாமு 2:30. உங்கள் அனைவருக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

கர்த்தரின் பணியில்

**டாக்டர் புஷ்பராஜ்**

## முக்கிய அறிவிப்பு:

டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு **வாட்ஸ் ஆப்,பேஸ்புக்** எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக்குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் வாட்ஸ் ஆப்,பேஸ்புக்கில் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன். அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன்.

**- டாக்டர்.புஷ்பராஜ்**

# திருநெல்வேலி CSI டையோசிஸ்

இந்தியாவில் மிக அதிக மிஷனரிகளை அனுப்பிய இரண்டு மாவட்டங்கள் 1). **திருநெல்வேலி** 2). **கன்னியாகுமரி** மாவட்டங்கள் ஆகும்.



Bishop AZARIA

இதில் **திருநெல்வேலி** மாவட்டம்தான் மிக அதிகமான **மிஷனரிகளை** வட இந்திய பகுதிகளுக்கு அனுப்பியதாகும். மேலும் தமிழ்நாட்டில் முதல் மிஷனரி தாகம் ஏற்படுத்தியவர் **பிஷப்.அசரியா** அவர்கள் என்றால் மிகையாகாது. அதைதொடர்ந்து FMPB மிஷனரி இயக்கம் தொடங்கியது. அடுத்தது IEM மிஷனரி இயக்கம் தொடங்கப்பட்டது, FMPB,IEMமைப்பின்பற்றி கன்னியாகுமரி மாவட்டம் FMPB, IEM மிஷனரி ஸ்தாபனங்களுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தின் CSI கிறிஸ்தவர்கள் தாராளமாக காணிக்கை கொடுப்பதை அறிந்த அன்றைய கன்னியாகுமரி டையோசிஸ் பிஷப்பாக இருந்த Rt.Rev. கிறிஸ்துதாஸ் அவர்கள் FMPB,க்கு போட்டியாக ஆரம்பித்ததுதான் D.M.P.B. (Diocesan Missionary Prayer Band) டையோசிஸ் மிஷனரி ஊழியம் தொடங்கும்முன் Rev. ELIAS அவர்கள் தனக்குள் ஏற்பட்ட மிஷனரிபாரம் கொண்டு **கல்ராயன்** மலையில் ஒரு சிறு குடிசைக்குள் தங்கி மிஷனரி ஊழியம் தொடங்கி சபைகளை உருவாக்கி அந்த ஆதிவாசி பிள்ளைகள் படிக்க பள்ளிக்கூடம் உருவாக்கி அந்த பிள்ளைகள் காட்டுக்குள்ளிருந்து பள்ளிக்கு வந்து போவது கடினம் என்று அந்த பிள்ளைகள் தங்கி படிக்க KNH என்ற ஸ்தாபனத்தின் உதவி மூலமாக ஹாஸ்டல் பணிந்து மிகச்சிறப்பாக டையோசிஸ் உதவியில்லாமல் அந்த பெரும் மிஷனரி ஊழியத்தை தியாகத்தோடு செய்ததைக்கண்ட டையோசிஸ் பிஷப் நிர்வாகிகள் வேண்டுதலுக்கு இணங்க கன்னியாகுமரி டையோசிஸ்ஸூடன் இணைந்து மிஷனரி ஸ்தாபனத்தின் எல்லையை விரிவாக்க மிகவும் உதவியாக இருந்தார். இப்படியாக மிஷனரி ஊழியங்கள் டையோசிஸ் மூலமாக தொடங்கி நடத்தப்பட்டன. அதன் பிறகு அதே கன்னியாகுமரி மாவட்டத்திலேயே ஏராளமான தனிப்பட்ட முறையில் மிஷனரி ஸ்தாபனங்களும், மிஷனரிகளும் எழுப்பினார்கள்.



பிஷப் ஜெபராஜ்

மிஷனரிகளை அனுப்புவதிலும் ஆவிக்குரிய விஷயங்களிலும் **திருநெல்வேலி** கிறிஸ்தவ சபைகள் மாவட்ட விசுவாசிகள் ஒருமுன்மாதிரியாகும். ஏராளமான **ஜெபக்குழுக்கள்** மூலம் பாரத தேசத்திற்காக ஜெபிக்க **ஜெபிக்கும் மக்கள் பெருகியதும்** திருநெல்வேலி திருமண்டலத்தில்தான். திருநெல்வேலி டையோசிஸ்ஸில் பெரும்பாலான CSI சபைகள் **மிஷனரி பணி** ஜெபக்குழுக்கள், ஜெபகூட்டம் நடத்த தன் ஆலயத்தை திறந்துக்கொடுக்க முன்வந்து சரித்திரம் படைத்தது. அந்த ஜெபக்குழுக்களிருந்துதான் FMPBக்கு உண்மையான மிஷனரிகள் பலர் எழும்பி வட இந்திய மாநிலங்களை சுவிசேஷத்தால் கலக்கினர்கள்.


இப்படி பலவித ஆவிக்குரிய விஷயங்களில் சிறப்பு பெற்ற திருநெல்வேலி டையோசிஸ் நாளாக நாளாக ஊழிய பாரம்நீங்கி **பதவி மோகத்தால்** கொஞ்சம் கொஞ்சமாக சீரழிய தொடங்கியது.



பிஷப்.டேனியேல்

பிஷப் Rt. Rev.**அகஸ்டின் ஜெபராஜ்** அவர்கள் பதவி காலம் முடியும் தருவாயில் தான் நான் **டாக்டர்.புஷ்பராஜ்** நெல்லை திருமண்டலத்தில் ஊழியத்துக்காக அழைக்கப்பட்டேன். அதன்பிறகு வந்த **பிஷப்மார்கள்** காலத்தில் நெல்லை திருமண்டலத்தில் பல ஊர்கள், பல கிராமங்கள், பல சபைகளில் **கன்வென்ஷனில்** பிரசங்கிக்க அழைக்கப்பட்டேன். **தூத்துக்குடியும், திருநெல்வேலியும்** ஒன்றாக இணைந்திருந்த காலமது. அன்றைய காலத்தில் நான் பிரசங்கிக்காத கிராமம் இல்லை. பிரசங்கிக்காத சபைகளும் இல்லை என்று கூறும்அளவு எல்லா நெல்லை திருமண்டல CSI மக்களாலும் **ஆயர்களாலும்** அன்பு கூறப்பட்டேன், மதிக்கப்பட்டேன்.

திருநெல்வேலி CSI டையோசிஸ் **Bishop Rt. Rev. Augustine Jebaraj** அவர்கள் காலத்துக்கு பிறகுதான் டையோசிஸ்சில் **கட்டுப்பாடுகள்** (Discipline) குறைய ஆரம்பித்தன. **பிஷப்.டேனியேல்,** பிஷப்.ஜேசன் தர்மராஜ், பிஷப். **ஜெயால் டேவிட்** அவர்களின் காலத்தில் மேற்கூறிய பிஷப்மார் **பதவி ஏற்ற ஆரம்ப காலத்தில்** மாத்திரம் **திருமண்டலமும்** அதை சார்ந்த **கல்லூரி ஸ்தாபனங்கள்** யாவும் மிக அருமையாக இயங்கின. மேலே குறிப்பிட்ட இந்த பிஷப்மார்களுக்கு ஆரம்ப காலத்தில் நல்ல பெயர் இருந்தது. **டையோசிஸ்சின் நிர்வாகம்** பல (Groups) குழுக்களின் ஆதிக்கத்தின் பிடியில் (Binding) **பிஷப்மார்கள் அகப்பட்டு பலமுள்ள பண பெலமுள்ள** (Groups) குழுக்கள் **கையில் பிஷப்மார்** அடிமைப்பட்டு நீட்டிய இடத்தில் நியமனம் இடமாற்றம் பணம் வங்கியிலிருந்து எடுப்பது ஆகிய விஷயத்தில் **கையெழுத்து இடும் அவலநிலைக்கு** தள்ளப்பட்டனர். அதை அவர்களால் தவிர்க்க இயலவில்லை. அதன்பிறகு பிஷப்மார் சுபாவம் மாறியது பெயரும் கெட்டுப்போனது.



**Bishop JAYAPAL DAVID**

அதனால் எந்த பிஷப்மார்களாலும் **சுயமாக தீர்மானம்** எடுக்கமுடியாமல் போனது. பிஷப்மார்,நிர்வாகிகளுக்கு அடிமைகளாகிப்போனார்கள். அது மாத்திரமல்ல, அதன் மூலம் பிஷப்மாரும் பெருத்த ஆதாயம் பெற்றார்கள். பல பிஷப்மார் தங்கள் ஏற்பாடுகளுக்கு இணங்காத ஆயர்களை அடிமைகள் போல் நடத்தினார்கள். அதன்பின்தான் **திருநெல்வேலி** டையோசிஸ் மிக பெரிய **அவமானங்களை** சந்திக்க நேர்ந்தது. எண்ண முடியாத **நீதிமன்ற வழக்குகள்,** எண்ண முடியாத **நீதிமன்ற** Stay Orderகள் நீயா? நானா? என்று பார்த்துவிடுவோம் என்ற **கவுரவபிரச்சனைகள். ஈகோ** பிரச்சனைகள் ஆகியவைகள் நெல்லை திருமண்டலத்திற்குள் **பேயாட்டம்** ஆடியது. இவர்களுடைய பதவி,போராட்டங்களுக்கிடையே மிகவும் அதிகமாக அகப்பட்டு **பாதிப்புக்குள்ளானவர்கள் ஆயர்களும்,உபதேசியார்களும்,ஆசிரியர்களுமாகும்.**

இதன் காரணமாக டையோசிஸ்ஸில் உள்ள எல்லா CSI சபைகளில் உள்ள சபை அங்கத்தினர் களின் **ஐக்கியமும்** சிதைந்து ஒவ்வொரு சபையிலும் **இரண்டு குரூப்புகள்** என்று பிரிந்து சபைகள் சமாதானம் இழந்து ஆலயத்துக்குள் **ஆராதனைவேளையிலேயே** ஒருவரை ஒருவர் **சண்டை யிட்டுக்கொண்ட** சாட்சியில்லா காட்சிகள் ஆலயத்தில் காண்பது சர்வசாதாரணமாகி விட்டது!.

நெல்லை ஊசி கோபுர சபையில் நடந்த கமிட்டி மீட்டிங்கில் பிஷப்.**ஜெயபால் டேவிட்** ஐயா அவர்களின் **அங்கியை கிழித்து** முகத்தில் அறைந்து அவரை **ஆலயத்தை விட்டு** அகற்ற

அவர் **கழுத்தை பிடித்து** வெளியே தள்ளியதை மொபைல் வழியாகவும், **தினகரன், மாலைமுரசு** போன்ற **தினசரி பத்திரிக்கைகளில்** புகைப்படங்கள் வெளிவந்ததை இந்தியாவிலும், வெளிநாட்டில் உள்ளவர்களும் கண்டு, இப்படியும் தமிழ்நாட்டில் மிகப்பெரிய திருமண்டலத்தில் உள்ள CSI ஆலயத்தில் நடக்கிறதே என்று வெட்கி தலைகுனிந்ததே!.

ஒருமுறை திருநெல்வேலி சிஎஸ்ஐ டையோசிஸ்ஸை சேர்ந்த உண்மை கிறிஸ்தவர்ளுடன் நாங்கள் கூடி ஜெபிக்கும்போது டையோசிஸ்ஸின் அவலநிலைக்கண்டு குறிப்பிட்ட உண்மை CSI மக்கள் என் கண்முன்னே கண்ணீர்விட்டு அழுததை நானே பார்த்தேன். சிஎஸ்ஐ சபையை குறித்து பாரம் உள்ளவர்கள் இப்போதும் அழுது ஜெபிக்கிறார்கள். ஆனால் அதே **நெல்லையில்** வாழும் பெரும்பகுதி **பெயர் கிறிஸ்தவர்களுக்கு** கிரிகெட் விளையாட்டை ரசிப்பதுபோல டையோசிஸ் நீதிமன்ற வழக்கில் **எந்த குரூப்** ஜெயிக்கும், **கோர்ட் தீர்ப்பு** யாருக்கு சாதகமாக அமையும் என்பதை அறிய **கிரிகெட் ரசிகர்கள்** மாதிரி வேடிக்கை பார்ப்பவர்களாக மட்டும் இருந்தார்கள். இப்போதும் பலர் அப்படித்தான் இருக்கிறார்கள். ஆனால் **பிஷப்புக்காக, டையோசிஸ் நிர்வாகிகளுக்காக** அழுது ஜெபிப்பவர்கள் இல்லை. நிர்வாகிகள் அல்லது பிஷப் ஊழல்வாதிகளோ, மதுபான பிரியர்களாகவோ இருந்தாலும் அவர்களுக்காக ஜெபிக்க வேதம் கட்டளையிட்டுள்ளதே!. 1 தீமோ. 2:1,2)

அதே **பிஷப்.ஜெயபால்டேவிட்** அவர்களும் **நானும்** (அன்று பிஷப் அவர்கள் ஆயராக இருந்தார்) ஆந்திராவில் **மல்கனகிரி** என்ற காட்டில் ஆதிவாசிகள் இடையே ஊழியம் செய்த போது அங்குள்ள சிறிய வீட்டில் தரையில் பாயிட்டு **தலையணை இல்லாமல்** படுத்து உறங்கி ஜெபித்த நாட்களை மறக்க இயலவில்லையே. நல்ல மிஷனரி பாரமுள்ள **ஜெபிக்கும் ஆயராக** இருந்த இந்த **பிஷப்** அவர்கள் பதவியில் அமர்ந்தவுடன் ஒரு சில மாதங்களுக்கு பிறகு ஒரு குறிப்பிட்ட **நிர்வாக கூட்டத்தின்** கட்டளைக்கு இணங்கியதால் தானே அந்த சாட்சிகெட்ட நிலையில் **கழுத்தை பிடித்து தள்ளும்** அந்த அசம்பாவிதம் அன்று அரங்கேறியது ! தவறுகள் இரண்டு பக்கமும் இருந்ததே!, ஆனால் அன்று யாருக்கும் தெய்வ பயம் இல்லாததை செயலில் ஊரறிய நாடறிய காட்டிவிட்டார்களே! பிஷப்.**ஜேசன் தர்மராஜ்** அவர்களின் தாயார் **Mrs. ஸ்டெல்லா தர்மராஜ்** அவர்களும், என் மனைவி **Mrs.மங்களவதனிபுஷ்பராஜ்** அவர்களும் வேறு சில சகோதரிகளும் இணைந்து ஒரு **புது ஊழியம்** தொடங்கினார்கள். விபச்சார தொழிலில் பிடிப்பட்ட பெண்களை விசாரணை கைதிகளாக அடைத்துவைத்து இருக்கும் அரசாங்க விடுதியில் இவர்களை நேரில் சந்தித்து சுவிசேஷம் அறிவித்து அதில் மனம் திரும்பி வாழ தீர்மானமெடுத்த பெண்களுக்காக நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தி அவர்களை அழைத்துக்கொண்டு அவர்களை பாதுகாத்து அவர்களுக்கு கைதொழில் கற்றுக்கொடுக்க ஆவிக்குறிய ஜீவியத்தில் வழிநடத்த **கோவில்பட்டியில்** ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து **பெண்கள் காப்பகம்** நடத்தினார்கள். ஆனால் சில மாதத்திலேயே இந்த பெண்களைப்பற்றிய விவரம் ஊரார் அறிந்து இப்படிப்பட்டவர்களுக்கு நாங்கள் வீடு வாடகைக்கு கொடுக்கமாட்டோம் என்று கூறியதால் பல வீடுகளில் குடியேறவேண்டியதாயிற்று.




**பிஷப் ஜேசன்தர்மராஜ்**

இப்படிப்பட்ட கஷ்டமான சூழ்நிலையில் அன்று பிஷப்பாக இருந்த Rt.Rev.**டேனியல்** அவர்களிடம் இவர்களைக்குறித்து அறிவித்து கெஞ்சி கேட்டதால் **பிரகாசபுரம்** என்ற ஊரில் டையோசிஸ்ஸின் பாழடைந்த ஒரு வீட்டை சீராக்கி உபயோகித்துக்கொள்ளுங்கள் என்றதால் இந்த பெண்களை அந்த ஊர் விடுதியில் நிரந்தரமாக தங்கவைத்தார்கள். பிஷப். ஜேசன் தர்மராஜ் அவர்களின் **தாயாரின்** மரணத்துக்கு பிறகு இப்போது டையோசிஸ் பெண்கள் ஐக்கிய சங்கம் அந்த பெண்கள் விடுதியை பொறுப்பேற்று நடத்திக்கொண்டு வருகிறதாக கேள்விப்பட்டேன். அந்த ஊழியம் தொடர்ந்து நடத்தப்படுவதை அறிந்து தேவனை துதிக்கிறேன்.

எதற்கு இதை குறிப்பிட்டேன் என்றால்? **பிஷப்.ஜேசன் தர்மராஜ்** அவர்கள் அப்படிப்பட்ட **ஜெபிக்கும் தாயினால் வளர்க்கப்பட்டு** ஆத்தும பாரத்தோடு **ஆதாயம்** செய்யும் அந்த **தாயினால் வளர்க்கப்பட்டவர்.** ஆனால் அவர் பிஷப்பாக அவர் பொறுப்பேற்றவுடன் பல மாற்றங்களை அவரில் நான் கண்டேன். அவர் காலத்தில்தான் **டையோசிஸ் நடத்தும் பெரிய கன்வென்ஷன்** மைதானத்தில் நடந்த அந்த பெரும் கூட்டத்தில் 5 நாட்கள் நான் பிரசங்கம் செய்தேன். அன்று அவருக்குள் நல்ல ஆவிக்குரிய வாஞ்சை இருந்தது. அவர் காலத்தில் மட்டும்தான் பங்காரப்பேட்டை வேதாகம கல்லூரியில் ஆயர்களை படிக்க அனுமதித்தார். அங்கு படித்தவர்களுக்கு ஆயராக அங்கீகாரமும் அளித்தார். அப்படிப்பட்டவர் கொஞ்சம் கொஞ்சமாக ஆவிக்குரிய ஜீவியத்திலும் திருமண்டலத்தை நடத்துவதிலும், நிர்வாகிகளின் கட்டளைக்கு கீழ்படிந்து அவர்களின் தவறான சில தீர்மானங்களுக்கு இவரும் ஒத்துப்போக தொடங்கினார். அதன்பிறகு நடந்த தேர்தலில் பல பிரச்சனைகள் திருமண்டலத்தில் ஏற்பட்டு சபை மக்களும் பல ஆயர்களும் பிஷப் அவர்களை வெறுக்கும் நிலை ஏற்பட்டது.

**அவர் காலத்தில் நடந்த CSI சினாட் கூட்டத்தில்தான் எல்லா தெய்வங்களும் ஒன்று** என்று (லிட்டர்ஜி)ஆராதனை கிரமத்தில் எழுதப்பட்ட அந்த தவறான உபதேசத்தை **சினாட்** CSI **சபைகளுக்கு** அறிமுகப்படுத்த முயன்றது. அந்த ஆராதனை ஒழுங்கு சிறு புத்தகத்தின் அந்த குறிப்பிட்ட பகுதியை அப்படியே நான் **ஜாமக்காரனில்** வெளியிட்டு அந்த உபதேசத்தை நம் CSI சபைகளுக்குள் **நுழைய விடக்கூடாது** என்று வாசகர்களை எழுதி கேட்டுக்கொண்டேன். கனம் **வேதநாயக சாஸ்தியார்** அவர்களும் அதை துண்டு பிரதியாக்கி பல சபைகளுக்கு எச்சரிக்கை விடுத்தார். அதன்பிறகுதான் பிஷப் **ஜேசன் தர்மராஜ்** அவர்கள் என்னோடுள்ள நெருக்கத்தை தவிர்த்தார். அவருக்கும் நான் **சத்துருவானேன்.**

## Bishop Rt. Rev. J.J. CHRISTUDASS


**Bishop Rt. Rev. J.J. CHRISTUDASS**

பிஷப்.ஜேசன்தர்மராஜ் அவர்களுக்கு பிறகு பிஷப்பானவர் இப்போதுள்ள Rt. Rev. J.J. Christudass அவர்களாகும். இப்போதுள்ள பிஷப் அவர்களும், அவர் மனைவியும் என்னுடன் நல்ல அன்பு வைத்திருந்தார்கள். இவர் காலத்தில்தான் டையோசிஸ்ஸில் பல புதிய பிரச்சனைகளும், சாட்சியில்லாத பிரச்சனைகள் உண்டாயிற்று. டையோசிஸ்சில் அன்று நடந்த சில பிரச்சனைகளை ஜாமக்காரனில் எழுதினேன். அதன்மூலம் **இவருக்கும் நான் சத்துரு ஆனேன்.** இரண்டு கணவன்மார் உயிரோடிருக்க வேறு திருமணம் செய்த ஒருவரை **பெண்கள் ஐக்கிய வருடாந்திர மாநாட்டுக்கு** பிஷப் அவர்களின் **மனைவி அவர்களை பிரசங்கம்** செய்ய அழைத்ததை தவறு என்று

**கண்டித்து ஜாமக்காரனில் எழுதினேன்.** அவர் பிரசங்கம் திருமண்டல பெண்களுக்கு **சாட்சி இல்லை** என்றும் எழுதினேன். பிஷப் அவர்கள் தன் மனைவியின் கட்டுப்பாட்டில் இருந்ததால் நெல்லை திருமண்டலத்தில் சிஎஸ்ஐ சபை கன்வென்ஷனுக்கு என்னை எந்த ஆயரும் அழைக்கக்கூடாது என்று வாய்மொழியாய் கட்டளையிட்டதால் அதை **பல ஆயர்கள்** என்னிடம் கூறி வேதனைப்பட்டார்கள் என்றாலும் **லே செயலரின்** அனுமதியுடன் சில ஆயர்கள் இப்போதும் என்னை அழைத்து கூட்டங்கள் நடத்திக்கொண்டிருக்கின்றனர். அந்த சில கதவுகளும் எப்போது அடைக்கப்பட்டு என் கூட்டங்கள் நிறுத்தப்படுமோ தெரியாது!.

# பிஷப் Rt. Rev. J.J. Christudass அவர்களின் இன்றைய நிலை.

பிஷப்மார்களின் ஓய்வு வயது 67 என்று மாற்றும் **சட்டத்திருத்தம்** கொண்டுவர விரும்பினார். **மாடரேட்டர்** அவர்ளை சந்தோஷப்படுத்த அந்த சட்டதிருத்தம் கொண்டும்வரும் தேர்தலை நெல்லை ஊசி கோபுர ஆலயத்தில் நடத்தியபோது **கமிட்டியில்** எல்லோரும் அதை எதிர்த்தனர். கமிட்டி கூட்டம் சண்டையில் முடிந்தது. **பிஷப் பேசிய மைக்கை பிடித்து இழுத்து** அவரை மேடையிலிருந்த வெளியேற்றியபோது **சட்ட திருத்தம் பூரண மொஜாரிட்டியுடன்** ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்று நான் அறிவிக்கிறேன்! என்று சத்தமாக கூறிக்கொண்டே போலீஸ் பாதுகாப்போடு வெளியேறினார்.

இன்று பிஷப் அவர்கள் ரிடையர்டு ஆகப்போகும் இந்த சூழ்நிலையில் ஓய்வுபெறும் வயதை இரண்டு வருடங்கள் கூட்டியதாலும் அந்த தீர்மானம் **தவறானமுறையில்** நிறைவேற்றப் பட்டதாலும் **தேவன் அதை அங்கீகரிக்கவில்லை** என்பதை இப்போது அவர் பிஷப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை உணரும்போது அவர் அறிந்துகொள்வார் என்று நம்புகிறேன். இப்போது பிஷப் அவர்கள் அனுபவிக்கும் **மனவேதனை, அவமானம்** மூலம் நிச்சயம் அவர் உணர்ந்து தன் தவறுக்கு கர்த்தரிடம் மன்னிப்புகேட்டால் **அவரின் முடிவு சமாதானமாக** இருக்கும். இன்று பிஷப்பின் அதிகாரம் நீக்கப்பட்டது. அவர் இப்போது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார். திரும்ப பிஷப் பதவியை தொடர **சமரச பேச்சுவார்த்தை** நடைபெறுகிறதாக கேள்விப்பட்டேன். ஒரு பிஷப் **பதவியில் இல்லாதபோது** தனது சபை மக்கள் (டையோசிஸ் மக்கள்) தன்னை **எப்படி மதிக்கிறார்கள்** என்பதை பிஷப் அவர்கள் மிக நன்றாக இப்போது உணர்ந்துக்கொண்டிருப்பார் என்று எண்ணுகிறேன். இழந்த பிஷப் பதவியை திரும்பபெற **உயர்நீதிமன்றமோ, உச்சநீதிமன்றமோ** பிஷப் அவர்கள் செல்ல பல லட்சங்கள் செலவழிக்க வேண்டுமே!. அந்த வக்கீல் செலவை யார் செய்வது?.

முன்பு **டையோசிஸ் பணத்தை** (மக்களின் **காணிக்கை பணத்தை)** தன் வீட்டு பணம்போல **கணக்கில்லாமல்** எடுத்து செலவழித்து **உச்சநீதிமன்றம்** வரை சென்றார். ஆனால் இப்போது இவருக்காக முன்பு பணம் செலவழித்த டையோசிஸ்ஸின் **பெரியவர்கள்** இப்போது **பணம் செலவழிக்க முன்வரவில்லை** என்று கேள்விப்பட்டேன். பிஷப் ஓய்வுபெற சில மாதங்களே உள்ள நிலையில் யாரும் இவருக்காக பணம் செலவழித்து அவரை மீண்டும் பதவியில் அமர்த்த முன் வரவில்லை என்றுதான் நினைக்கிறேன். தானும் தன் மனைவியும் சேமித்துவைத்த பெரிய பணத்தொகையை செலவழிக்கவும் இவர் மனைவிக்கு இவருக்கும் மனமில்லை.இப்போது அவர் **ஒற்றைப்படுத்தப்பட்ட** நிலையில் உள்ளார் என்று கேள்விப்பட்டேன்.

**"ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்".** நீதி 16:7. இதை பிஷப் அவர்கள் விளங்கிக்கொண்டால் நல்லது.

**இப்போது அடக்க ஆராதனைக்குகூட** யாரும் பிஷப் அவர்களை அழைப்பதில்லை. இப்போதே இப்படியானால் இவரது ரிடையர்ட்மெண்ட்டுக்கு பிறகு எப்படியிருக்கும்? யோசித்துப்பாருங்கள்? மேளதாளத்தோடு பிஷப்பாகி டையோசிஸ்குள் வந்தவர் இப்போதுள்ள நிலை நீடித்தால் பிஷப் அவர்கள் ஓய்வு பெற்று டையோசிஸ் வீட்டைவிட்டு எந்த நிலையில் வெளியேறப்போகிறார். **பிரிவு உபச்சாரம்** நடத்த கமிட்டி விரும்புமா? மற்ற எல்லா பிஷப்மார்களுக்கும் நெல்லை பிஷப் ஐயாவின் இப்போதைய நிலையும் ஒரு பாடமாக இருக்கட்டும்.

தூத்துக்குடி டையோசிஸ்ஸின் பழைய பிஷப்பின் நிலைபோலவே இவருடைய நிலையும் அமையும். **இன்னொரு உதாரணம்** வாசகர்கள் **ஆயர்கள்** மற்றும் **CSIயின் 24 டையோசிஸ் பிஷப்மார்களும்** அறிய வேண்டும் என்பதற்காக இதை எழுதுகிறேன். ஒரு குறிப்பிட்ட சிஎஸ்ஐ டையோசிஸ்ஸில் பணியாற்றிய **ஒரு பிஷப்புக்கு** சம்பவித்ததை இங்கு கூறவேண்டியது அவசியம். எந்த டையோசிஸ் என்று பெயர் குறிப்பிட நான் விரும்பவில்லை.

# சிஎஸ்ஐ, லூத்தரன் சபையில் பிஷப் பதவியில் உள்ளவர்கள் கவனிக்கவும்:

ஒரு காலத்தில் என் நண்பராக இருந்த நான் குறிப்பிட்ட அந்த பிஷப் பதவியேற்ற இரண்டு வருடத்துக்குள் அந்த பிஷப் **பிரச்சனைஒன்றில் அகப்பட்டார்.** டையோசிஸ் **லே செகட்ரரி,** டையோசிஸ் **மோஜனரும்** செய்த தவறால் பிஷப் அவர்கள் கோர்ட்டில் நிறுத்தப்பட்டார். டையோசிஸ் சபைகளின் நிலத்தில் உள்ள ஒரு அசையா சொத்தை **சட்ட விரோதமாக** விலைக்குவிற்ற ஒரு விஷயத்தில் **அரசாங்கத்தை** ஏமாற்றிய குற்றத்தில் **கையும் களவுமாக** பிடிபட்டார். அவருக்கு கீழ் உள்ளவர்களான **லே செயலர்**, டையோசிஸ் **மேனேஜர்** ஆகியவர்கள் சேர்ந்து செய்த தவருக்கு பிஷப் அவர்கள் **கையெழுத்து** போட்ட காரணத்தினால் **பிஷப் அவர்கள்** தண்டனை பெற்றார்.

**நீதிபதி** பிஷப்பை பார்த்து கேட்டது பிஷப்பாகிய நீங்கள் செய்த குற்றத்துக்காக **6 கோடி அபராதம்** கட்டுகிறீர்களா? ஒரு **வருடம் ஜெயில் தண்டனை வேண்டுமா?** என்று கேட்டார். பிஷப் அவர்களுக்கு கோர்ட்டிலேயே தலை மயக்கம் ஏற்பட்டது. 10 நிமிடம் கோர்ட்டில் நிசப்தம் நிலவியது. முடிவில் பிஷப் தன் வக்கீலுடன் ஆலோசித்து அதன்பின் எழுந்துநின்று **அபராத தொகையை** கட்டிவிடுகிறேன் என்றார். **தீர்ப்பு எழுதப்பட்டது.** பிஷப் வீடு திரும்பினார். டையோசிஸ் **நிர்வாகிகள்** செய்த திருட்டுதனம் தனக்கு இத்தனை பெரும் அவமானத்தை உண்டாக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. பிஷப் அவர்கள் இரவு முழுவதும் தூங்கவில்லை. டையோசிஸ் அந்த பணத்தை கட்டவேண்டும். டையோசிஸ்சில் நிதிநிலை மிக மோசம். அபராதம் கட்ட வழியில்லை என்று டையோசிஸ் நிர்வாகிகள் கைவிரித்துவிட்டனர்.

டையோசிஸ்ஸின் அனைத்து சபை ஜனங்களிடமும் அபராத தொகை கட்ட **விசேஷ காணிக்கை** எடுக்க ஆயர்கள் தங்களுடைய சபை கமிட்டியினரிடம் ஆலோசனை கேட்டனர். **அபராதம் கட்டவேண்டி** விசேஷ காணிக்கை எடுக்க சபை மக்களாகிய நாங்கள் சம்மதிக்கமாட்டோம் என்று கூறி தங்கள் எதிர்பை தெரிவித்தனர்.

அவ்வளவுதான். **பிஷப்** வீட்டுக்கு சென்று படுத்தார். **மறுநாள் காலை காலும்,கையும்** செயலிழந்துபோனது, **நாக்கு** தொங்கிப்போனது. பல சிகிச்சைகள் செய்தும் சுகம் பெற முடியவில்லை. இப்போதும் அவர் உயிரோடுதான் இருக்கிறார். சில மாதங்களுக்குமுன் அந்த **பிஷப்** அவர்களின் **மனைவி** என்னை போனில் அழைத்து சம்பந்தமில்லாமல் என்னிடம் மன்னிப்பு கேட்டு அழுதார். அதோடு அவர் கூறியது என் மனதை மிகவும் வேதனைப்படுத்தியது. ஓய்வு பெற்றபின் பிஷப்புக்கு சேரவேண்டிய தொகையை **டையோசிஸ் நிர்வாகிகள்** இதுவரை கொடுக்கவில்லை. அதற்காக **பிஷப் அவர்கள் நீதிமன்றம்** சென்றார். நாங்கள் **இதில் தலையிடமாட்டோம்** என்று **நீதிமன்றம்** அறிவித்தது. **ஜாமக்காரனான** நீங்களாவது டையோசிஸ் நிர்வாகிகளிடம் பேசி அல்லது **ஜாமக்காரனில் எங்கள் நிலையை எழுதி** அந்த பணத்தை பெற்றுப்கொடுக்க உதவுவீர்களா? **பிஷப்பின் வைத்திய செலவுக்கு பிசியோதரபிஸ்ட்களுக்கு** பணம் கொடுக்க உதவியாக இருக்கும் என்று அழுதார். என்ன பரிதாபம்!. இப்போது அந்த டையோசிஸ்க்கு **புதிய பிஷப்** தேர்ந்தெடுக்கப்பட்டார். புதிய பிஷப் அவர்கள் நீதிமன்றதுக்கு கடிதம் எழுதினார். அதில் டையோசிஸ்ஸில் நடந்த அந்த திருட்டு சம்பவம் புதிய பிஷப்பாக பொறுப்பேற்ற என் காலத்தில் நடந்ததல்ல என்றாலும் **அபராத தொகையை** கொஞ்ச கொஞ்சமாக எங்கள் டையோசிஸ் அடைத்துவிடும் என்று எழுதி விண்ணப்பித்துள்ளார்.

ஓய்வுபெற்ற **பிஷப்பின் நிலையை பார்த்தீர்களா?** பிஷப்புக்கு ஏற்பட்ட இந்த வேதனைக்கு வேறு சில காரணமும் உண்டு. பிஷப் அவர்கள் பதவியில் இருக்கும்போது **பிஷப் எலக்ஷனில்** தன்னோடு போட்டியிட்ட **அதிக எண்ணிக்கையில்** ஓட்டுபெற்று ஜெயித்து பிஷப் பேனலில் முதல் நிலைக்கு வந்தும் அந்த ஆயர் பிஷப்பாக தேர்ந்தெடுக்கப்படவில்லை. **மாடரேட்டருக்கு** அதிக பணம் **லஞ்சமாக** கொடுத்தவர் யாரோ, அந்த செல்வந்தர் யாரை சிபாரிசு செய்தாரோ மூன்றாம் நிலையில் குறைந்த வாக்குகள் பெற்று தேற்ற அந்த ஆயரை அன்றைய மாடரேட்டர் அவர்கள் பிஷப்பாக அறிவித்தார். அதிக ஓட்டுபெற்ற ஆயர் சோர்ந்துபோனார். அதோடு விட்டிருந்தாலும் பிரச்சனையில்லை. புது பிஷப் தன்னோடு போட்டியிட்டு அதிக ஓட்டு வாங்கிய **ஆயரை காரணமில்லாமல் பழிவாங்க** தொடங்கினார். **முதல் நிலையில் அதிக ஓட்டுகளை** பெற்ற அந்த சீனியர் ஆயர் அவர்களை டையோசிஸ்சின் **குக்கிராமம்** ஒன்றில் உள்ள **சின்ன ஆலயத்தில்** ஆயராக பணியாற்ற மாற்றல் (Transfer) கொடுத்து அனுப்பிவிட்டார்.


**ஆங்கில சபையிலும், கத்தீட்ரல்** சபையிலும் ஆயராக பணிசெய்த ஒரு சீனியர் ஆயரை பிஷப் பேனலில் முதல் நிலைக்கு ஜெயித்துவந்த அந்த ஆயரை குற்ற உணர்ச்சியால் பிஷப் அந்த ஆயரை எப்படியெல்லாம் பழிவாங்கினார் பார்த்தீர்களா? அந்த ஆயர் என்னிடம் பேசும்போது அழுதுவிட்டார். நான் பிஷப் எலக்ஷனில் ஏமாற்றப்பட்டேன் என்று பிஷப்புக்கு எதிராக நீதி கேட்டு கோர்டுக்கோ, பிரச்சனைக்கோ போனதில்லை. பின் ஏன் என்னை இப்படி ஒதுக்கி அவமானப்படுத்தவேண்டும்?. வயது குறைந்த வாலிபஆயரான **டிஸ்ட்டிரிக்ட் சேர்மேன்** அவர்களின் கீழ் இப்போது நான் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். மனம் வெறுத்துபோனேன் என்றார்.

இந்த பிஷப் **நிர்வாக கமிட்டிக்கு** பிடிக்காத சில **ஆசிரியர்களையும்,** ஆயர்களையும் இடமாற்றம் செய்து **மனைவி** ஒரு இடத்திலும், **ஆயர் வெகுதூரத்திலும்** பிரிந்த நிலையில் அவர்களை இடம்மாற்றம் செய்துவிட்டார். இப்போதும் அந்த ஆயர் தன் ஊழியத்தை கண்ணீரோடு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் கண்ணீர்தான் **பிஷப் அவர்களை** இயேசுவே என்று கூறகூட வாய்திறந்து **அழைக்கமுடியாத** நிலைக்கு படுத்த படுக்கையில் தள்ள காரணமானது. இப்போது அவர் படுத்த படுக்கையாக கிடக்கிறார்.

ஒரு பிஷப் தான் பதவியில் இருக்கும்போது தவறான செய்கைகளுக்கு டையோசிஸ் **நிர்வாகிகளுக்கு** பணியாமல் **தவறான தீர்மானங்களுக்கு** இடம்கொடுக்காமல் **யாரையும் பழி வாங்காமல்** கர்த்தருடைய சபையின் தலைமை மேய்ப்பனாகவும், பிஷப்பாகவும் பணியாற்றுகிறாரோ! அவர் ஓய்வுபெற்றாலும் **டையோசிஸ்சில்** உள்ள அத்தனை ஆயர்களும் அவரை மதிப்பார்கள். **சபை மக்களும்** மதிப்பார்கள். அப்படிப்பட்ட மதிப்பை பெற்ற இரண்டு பிஷப்பையும் ஒரு மாடரேட்டரையும் நான் அறிவேன். அவர்தான் **தெற்கு கேரள** டையோசிஸின் பிஷப்பும் CSI முழுமைக்கும் **மாடரேட்டருமாய்** பணிபுரிந்தவரான மறைந்த Most Rev. JESUDAS, (திருவனந்தபுரம்) பிஷப் ஆகும். இவர் தன் சொந்த வீட்டை (பங்களாவை) டையோசிஸ்சின் உபயோகத்துக்காக தானமாக கொடுத்துவிட்டார். CSIயின் 24 டையோசிஸ்களிலும் நல்மதிப்பை பெற்ற இவருக்காக தேவனை நான் துதிக்கிறேன்.

மார்தோமா சபையில் Rt. Rev. தீமோத்தேயூ பிஷப் அவர்களும் மரிக்கும் வரை **நற்சாட்சி** பெற்றவராகும். இப்போது CNI(Church of North India) பிஷப்பும் **மாடரேட்டருமாக** உள்ள **Most Rev. Dr.P.K.சமந்த்ராய்,அமிர்தசரஸ் டையோசிஸ்**(பஞ்சாப்) பிஷப்பும், CNI **மாடரேட்டருமாகும்.** மாடரேட்டர் அவர்களின் **எளிமை** சாட்சியுள்ள **ஜீவியம் மிஷனரி பணியில்** அவர் காட்டும் ஆர்வம் CNIல் உள்ள அத்தனை ஆயர்களும், அவர்மீது இப்போதும் நல் மதிப்பு வைத்துள்ளார்கள். இயேசுகிறிஸ்து கூறினார். **"ஊழியம் கொள்ளவரவில்லை. ஊழியம் செய்யவே வந்தேன்"** என்று கூறி சீஷர்களின் கால்களை கழுவினாரே!. அந்த **தாழ்மையும்** எளிமையும் **பிஷப் ஸ்தானத்தில்** உள்ளவர்களுக்கு **நிச்சயம் தேவை.** ஜாமக்காரன் CSIன் 24 டையோசிஸ்களுக்கும் CNIன் உள்ள **பல டையோசிஸ்களுக்கும், மெத்தடிஸ்ட், லூத்தரன்** சபைகளின் **பிரசிடென்ட்** பிஷப்மார்களுக்கும் ஜாமக்காரன் பத்திரிகை அனுப்பப்படுகிறது! அத்தனைபேரும் ஜாமக்காரனை தங்கள் பாஷைகளில் மொழியெர்த்து தங்கள் டையோசிஸ்ஸில் உள்ள **பல ஆயர்களுக்கு** அனுப்புகிறதாக அறிந்து தேவனை துதிக்கிறேன்.

தவறு செய்த மாடரேட்டரை பகிரங்கமாக எதிர்த்த பிஷப் **Rt. Rev.George Isaac** அவர்களாகும். **பிலிவர்ஸ் சர்ச்** என்ற பெந்தேகோஸ்தே சபைகளின் ஸ்தாபகரும், **ஆத்மீக யாத்திரை** என்ற வானொலி நிகழ்ச்சி மூலம் பிரபலமானவருமான பெந்தேகோஸ்தே சபையின் பாஸ்டரான பாஸ்டர். K.P.யோகன்னன் அவர்களை அன்றைய C.S.I மாடரேட்டர் Most Rev. K.J.**சாமுவேல்** அவர்கள்,பாஸ்டர் K.P.யோகன்னன் அவர்களை பிஷப்பாக பிரதிஷ்டை செய்ய 4 பிஷப்மாருக்கு லஞ்சம் கொடுத்து வரவழைக்கப்பட்டார் ஒரு பிஷப்புக்கு மாத்திரம் 12 கோடிகள் லஞ்சமாக கொடுத்து **கன்னியாகுமரி டையோசிஸ்** பிஷப்புக்கு ஒரு கோடியும், **வடஇந்தியாவில்**



இருந்து வரவழைக்கப்பட்ட இரண்டு பிஷப்புக்கு 40 லட்சங்கள் லஞ்சமாக கொடுத்து பாஸ்டர் K.P.யோகன்னன் அவர்களை C.S.I. முறைப்படி பிஷப்பாக கான்சிகிரேட்(அபிஷேகம்) செய்து வைத்தார். இது பெரும் பிரச்சனையாகி அன்று வடக்கு கேரள பிஷப்பாக பணியாற்றிய Rt. Rev.George Isaac அவர்கள் அதை வெளியரங்கமாக எதிர்த்தார். ஒரு பெந்தேகோஸ்தே சபை பாஸ்டருக்கு, ஒரு CSI மாடரேட்டர் எப்படி **பிஷப் அபிஷேக ஆராதனை** நடத்தலாம். இது C.S.I. சட்டத்துக்கு விரோதமானது. ஆகவே மாடரேட்டர் K.J. **சாமுவேல்** அவர்கள் மாடரேட்டர் பதவியிலிருந்து விலகவேண்டும் என்று பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தார். மாடரேட்டர் பதவி விலக மறுத்தார். உடனே பிஷப்.**ஜார்ஜ் ஐசக்** அவர்கள் தன் பிஷப் பதவியை ராஜினாமா செய்தார். பிஷப் பதவியிலிருக்கும்போதே தன் பிஷப் பதவியை ராஜினாமா செய்த முதல் C.S.I. பிஷப் Rt. Rev. **ஜார்ஜ் ஐசக்** அவர்களாகும். இது பெருமைக்குரிய விஷயமாகும். பதவி மோகம் உள்ளவர்களுக்கு இதன் ஆசீர்வாதம் புரியாது.

இது C.S.I. சபை பிஷப்மார்களுக்கு நல்ல ஒரு முன்மாதிரியாகும். ஆனால் மாடரேட்டர் போட்ட பணம் என்ற எலும்பு துண்டுக்கு ஆசைப்பட்டு 67 என்ற ஓய்வு வயதுக்கும் மற்ற சட்ட திருத்தத்துக்கும் குறுக்கு வழியில் செயல்பட்டு பொய்யான எலக்ஷன் ரிப்போர்ட்டை சமர்ப்பித்து சட்ட திருத்தத்தை பல கோடி ரூபாய்கள் செலவழித்து **சுப்ரீம் கோர்ட்** வரை சென்று சில நீதிபதிகளுக்கு லஞ்சம் கொடுத்து சட்ட திருத்தத்தை ஜெயமாக்கின, அந்த தவறுக்கு நம்முடைய பிஷப்மார் எத்தனையோ பேர் அந்த பாவத்துக்கும் உடன் ஒத்துழைத்தார்கள். ஜாக்கிறதை! ஓய்வு வயது இரண்டு வருடம் நீண்டுப்போகலாம். அந்த இரண்டு வருடங்களும் சம்பந்தப்பட்டவர்கள் நிம்மதியாக ஊழியம் செய்யமுடியாது. ஓய்வுப்பெற்ற பின்னும் அப்படி தவறு செய்த பிஷப்மார்கள் சந்தோஷமாக மீதி நாட்களை கழிக்கவும் முடியாது.

**"கர்த்தரின் ஆசீரவாதமே ஐசுவரியத்தை தரும். அதனோடே அவர் வேதனையை கூட்டார்".** நீதி. 10:22

இப்படி நான் வெளிப்படையாக எழுதுவதால் ஏற்படும் **எதிர்ப்புகளை, தாக்குதல்களை, வெறுப்புகளையும் எதிர்பார்த்துதான்** கர்த்தர் **என் கையில் கொடுத்த** ஜாமக்காரன் பணியை **நிறைவேற்றுகிறேன்.**

கர்த்தர் தாமே **திருநெல்வேலி** CSI டையோசிஸ்சில் உள்ள மக்களை சமாதானத்துடன் ஆராதிக்க அருள்புரிவாராக. கர்த்தர் திருநெல்வேலி **நிர்வாகிகளுக்கு** வெறுப்பு **கசப்பு யாரிடமீதும்** உண்டாகாமல் **யாரையும் பழி வாங்காமல்** இடம் மாற்றங்களினால் ஆயர்கள் மனது **வேதனைப்படாமல்** அவர்கள் **குடும்பத்தோடு** இணைந்து வாழ்ந்து **சபை மக்களையும்** மன சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் நடத்தி ஊழியம் செய்ய கர்த்தரின் ஆவியானவர் திருநெல்வேலி திருமண்டலத்தில் உள்ள ஒவ்வொரு நிர்வாகிகளின் உள்ளத்தோடும் பேசி தகுதியுள்ளவர்களை **புதிய பிஷப்பாக தெரிந்தெடுக்க** கர்த்தர் அவர்களுக்கு அருள்புரிய ஜெபிக்கிறேன். அடுத்த தேர்தலில் **திருநெல்வேலி சிஎஸ்ஐ டையோசிஸ் பிஷப்பாக** வரப்போகிறவர் **எந்த குழுவினரையும்,எவரையும் சார்ந்து செயல்படாமல், நீதியுடன், தேவபயத்துடன்** தன் ஊழியத்தை சமாதானத்துடன் நிறைவேற்றும் ஒரு நல்ல ஆயராக தேர்ந்தெடுக்கப்பட கர்த்தர் அருள்புரிவாராக. **பிஷப்மார்களை** தேர்ந்தெடுக்க **இனி யாரும்**

**லஞ்சம்** கொடுக்காதபடி **DC மெம்பர்களும்,** ஆயர்களும் ஒன்றிணைந்து **ஜெபித்து** தேர்ந்தெடுப்பார்களாக. தெய்வபயம் உள்ளவர்களை தேர்ந்தெடுப்பார்களாக!.

குறிப்பாக, **மதுபானத்துக்கு** அடிமையானவர் யாரும் **நெல்லை சிஎஸ்ஐ திருமண்டலத்தை** ஆளாதபடி அவர்கள் **அரசியல்வாதிகள் யார் காலிலும்** விழாதவர்களாக **கிறிஸ்தவர்** அல்லாத **திரு.வைகுண்டராஜ்** போன்றவர்கள் யாரும் **பரிசுத்த தேவனின் கிறிஸ்தவ சபைகளில்** தலையிடாதபடி பார்த்துக்கொளளுங்கள். ஆமென்.

குறிப்பாக எலக்ஷனில் நிற்பவர்கள் தங்களை தற்பரிசோதனை செய்து பரிசுத்த தேவனுடைய சரீரமாகிய திருச்சபையை மதுபானத்துக்கும், லஞ்ச பணத்துக்கும் அடிமையானவர்களை டையோசிஸ் எலக்ஷனில் தெரிந்தெடுத்து கர்த்தரை வேதனைப் படுத்திவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

திருநெல்வேலி சிஎஸ்ஐ திருமண்டலத்தில் உள்ள ஒவ்வொரு பெண்களும் அவரவர்களுடைய கணவன்மார்களைப்பற்றியும், அவர்களின் பாவ வாழ்க்கைப்பற்றியும் அவர்கள் **குடிபழக்கத்தை**ப்பற்றியும் மிக நன்றாக அறிவார்கள். ஆகவே பெண்கள் தகுதியற்ற தங்களின் கணவன்மார்களை டையோசிஸ் தேர்தலிலும், டையோசிஸ் பிரச்சனைகளிலும் தலையிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். திருமண்டலத்தில் உள்ள பெண்கள் மனது வைத்தால் நெல்லை திருமண்டலத்தை பரிசுத்த பாதையில் கொண்டுசெல்ல **தகுதியற்ற தங்கள் கணவன்மார்கள்** சபைக்குள் பிரவேசிக்காதபடி அவர்களால் பார்த்துக்கொள்ள முடியும். மனைவிமார்கள் தங்கள் கணவர்களுக்கு எச்சரிக்கையும், ஆலோசனையும் கூற உரிமையுண்டு.

சபைக்கு கர்த்தர் கொண்டுவரும் தண்டனை. சங்காரதூதன் மூலம் நிறைவேற்றப்படும். எசே. 9:6ல் **"சங்கார தூதன் முதலில் சபை மூப்பர்களிடம் சங்காரத்தை ஆரம்பித்தான்"** என்றுதான் வேதத்தில் எழுதியிருக்கிறது. தகுதியில்லாத நிலையில் மதுபானத்துக்கு அடிமைபட்டவராய் உன் கணவன் டையோசிஸ்ஸில் தலையிட்டால் அது உங்கள் **கணவருக்கும், உங்கள் குடும்பத்துக்கும் ஆபத்தை உண்டாக்கும்.** உங்கள் பிள்ளைகள் அனாதையாவார்கள்.

சபை ஊழியம் என்பது சாதாரண கவர்மென்ட் வேலைப்போல் அல்ல. அது தேவ ஊழியம். தகுதியற்றவர்களை கர்த்தரே அழிப்பார். தேவாலயத்தில் தகுதியில்லாமல் ஊழியம் செய்த **உசியா ராஜாவுக்கு நெற்றியில் குஷ்டம்** வந்தது. (2 நாளா. 26:21) உடன்படிக்கை பெட்டியை தகுதியில்லாமல் தொட்டவர்களை அதே இடத்தில் கர்த்தர் அவர்களை **அடித்து சாகடித்தார்.** (I நாளா. 13:10). சபை கமிட்டியில், **பிஷப்** பதவியில் ஊழியத்தில் தகுதியில்லாதவர்கள் இப்போதே தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிடுவது நல்லது. கர்த்தரின் தண்டனை உங்கள் குடும்பத்தை நோக்கி வரவேண்டாம். இது நெல்லை C.S.I. சபை மக்களை நேசிக்கும் ஜாமக்காரனின் வேண்டுகோளும் மற்றும் எச்சரிப்பும் ஆகும். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# பிரபல கன்வென்ஷன் பிரசங்கியார் சகோ. சாமுவேல் கணேசன் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.



பிரபல கன்வென்ஷன் பிரசங்கியராக CSI,மார்தோமா சபை என்று தமிழ்நட்டிலும்,கேரள மாநிலத்திலும் கன்வென்ஷனில் பிரசங்கித்து வந்த **சகோ.சாமுவேல் கணேசன்** அவர்கள் மறைந்தது கிறிஸ்தவ சபைகளுக்கு பெரும் இழப்பாகும்.

2017 அகஸ்ட் மாதம் 31ம் தேதி காலை தனது 82வது வயதில் மரித்துபோனார்.

செங்கோட்டை **பிராமண தெருவான** அக்ரஹாரத்தில் பிராமண ஜாதியில் பிறந்து தன் குல மந்திரங்களை படித்தவர். பள்ளி படிப்பு குறைவுதான் 5ம் வகுப்பு வரை படித்தார். தனது 21வது வயதில் முழுநேர ஊழியத்தில் இறங்கினார். வேதாகம கல்லூரி படிப்பு அவருக்கு இல்லை என்றாலும் தானே வேதத்தை படித்து ஆராய்ந்து மிகத் தெளிவோடு சுந்தர தமிழில் மட்டுமே பிரசங்கிக்கும் மிக எளிமையான ஊழியக்காரன்.

கேரளாவில் திருவல்லாவில் உள்ள நவஜிவோதியா ஊழிய ஸ்தாபனமான பிரபல கன்வென்ஷன் பிரசங்கியாரான **Bro. K.V.செரியான்** அவர்களிடம் சில காலம் அவரோடு ஊழியங்களில் பங்குகொண்டு ஊழியம் செய்வதை கற்றுக்கொண்டார். அன்றும் - என்றும் அவர் அணியும் உடைகளில் மரிக்கும்வரை மாற்றம் இல்லாமல் வாழ்ந்தவர்.

அமெரிக்கா, கனடா, அரேபியா ராஜ்யங்களில் வாழும் மார்தோமா சபை, CSI சபை மலையாளிகள் இவரை மிகவும் அதிகமாக தங்கள் சபைகளில் பயன்படுத்தினர். தமிழ்நாட்டில் ஈரோடு **பிரப்** சபையினர் அவரை வருடா வருடம் அழைத்து கூட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள்.

திருவல்லா சகோ. K.V. செரியான் (KESWICK கன்வென்ஷன் ஸ்தாபகர்) அவர்களின் மகளை தனது 26ம் வயதில் திருமணம் செய்து செங்கோட்டை CSI சபை அருகில் சொந்தமாக வீடுகட்டி ஊழியம் தொடர்ந்தார். இவரின் ஒரு மகள் IEM பொது செயலாராக பணியாற்றி ஓய்வு பெற்ற Rev. Wesley அவர்களை திருமணம் செய்தார். மற்றொரு மகள் பாண்டிச்சேரியில் கவுன்சிலிங் சென்டர் வைத்து ஆவிக்குறிய ஆலோசனைகளை திருமணமாக போகிறவர்களும், திருமணமானவர்களுக்கும் ஆலோசனைகளை கூறும் ஊழியத்தை செய்து வருகிறார்.

தனது ஒரே மகன் Mr. Benjamin அவர்கள் தெரு பிரசங்கம், கிராம ஊழியங்களை நிறைவேற்றி வருகிறார். சகோ. சாமுவேல் கணேசன் அவர்களுக்கு ஞாபக சக்தி குறைவு வியாதி உண்டானதால் மரிக்கும்முன் சில காலம் ஊழியத்துக்கு எங்கும் போகாமல் இருந்தார். இந்த விவரம் அறிந்து நானே செங்கோட்டை சென்று ஜெபித்து வந்தேன். என்னை நன்றாக ஞாபகம் வைத்திருக்கிறார் என்பதை அவர் வரவேற்றபோதே அறிந்து சந்தோஷப்பட்டேன்.

மரித்த விவரம் அறிந்தபின் திருநெல்வேலி CSI டையோசிஸ் மெம்பராக DC செங்கோட்டை CSI சபை செயலாளராக பல ஆண்டுகள் பணிகள் செய்தும் நெல்லை திருமண்டலத்தில் CSI சபைகளில் யாரும் இவர் மரணத்தை சபையில் அறிவிக்கவில்லை. காரணம், சகோதரன் அவர்கள் நெல்லை திருமண்டல கமிட்டி கூட்டங்களிலும், செங்கோட்டை CSI சபை கமிட்டி பொறுப்பிலும் தீவிரமாக இருந்ததால் பல ஆயர்களின் வெறுப்புக்குள்ளானார். அனேக ஆண்டுகளுக்குமுன் நானே நேரில் செங்கோட்டை சென்று நம்மைபோல் பிரசங்க ஊழியம் செய்பவர்கள் சபை அரசியலில் குறிப்பாக எந்த DC கவுன்சிலும், சர்ச் கவுன்சிலிலும் பொறுப்பெடுக்ககூடாது என்று ஆலோசனை கூறி வந்தேன். இவர் கனடா நாட்டுக்கு வந்தபோது இருதய நோய் உண்டானது. அதில் அவர் தப்பி பிழைத்து இந்தியா வந்து சேர்ந்ததே அற்புதம். கர்த்தர் தாமே **சகோ.சாமுவேல்கணேசன்** அவர்கள் பிள்ளைகளின் குடும்பத்தினருக்கு ஆறுதல் அளிப்பாராக.

## உயிர் காக்கும் இரத்த தானம்

நீங்கள் ஒருவருக்கு கொடுக்கும் **இரத்தம் பல உயிர்களை பிழைக்க வைக்கிறது. இரத்தம்** கொடுக்கும் உங்களுக்கும் புது இரத்தம் உடனே உற்பத்தியாகும். உங்களுக்கு இதன்மூலம் பலவீனமோ நஷ்டமோ உண்டாகாது. அதற்கு பதில் புதிய இரத்தம் புது பெலத்தோடு உங்களுக்கு உற்பத்தியாகிறது.

**இரத்தம் கொடுத்து** உதவி செய்ய உயர்ந்த மனம் உள்ளவர்கள் தொடர்புக்கொள்ள வேண்டிய முகவரி :

**The Cross Blood Foundation**

5/23, Amman Koil Street,
Thanthankuppam, Villivakkam, Chennai - 600 049
தொலைபேசி : 044-26505001 கைபேசி : 097908 33330
E-mail : crossbloodfoundation@gamil.com, web: www.cross blood foundation.org

குறிப்பு : உங்கள் குறிப்பிட்ட இரத்த இனத்தை 'A,B,C' இன்னும் 'O' சில குரூப் இரத்த இனத்தை இந்த ஸ்தாபனத்தினர் குறித்து கொண்டு உங்களை தேவையுள்ளபோது உங்கள் தொலைபேசியில் அழைப்பார்கள். உங்களுக்கு சவுகரியமான நேரத்தில் வந்து இரத்தம் கொடுக்கலாம் அல்லது இவர்களோ உங்கள் வீடு தேடிவந்து இரத்தம் பெற்றுக்கொள்வார்கள். மரணத்தருவாயில் இருந்து இரத்தம்பெற்று உயிர் பிழைத்த குழந்தைகள், பெரியவர்கள், பிள்ளைபெற்ற பெண்கள் இவர்கள் எல்லாரையும் சென்னை எக்மோர் Children Hospitalலில் வரவழைத்து இரத்தம் பெற்று உயிர் பிழைத்தவர்கள் இந்து. முஸ்லிம், கிறிஸ்தவர். இப்படி பல மதத்தவர் இரத்த புற்று வியாதியில் தக்கசமயத்தில் மேற்குறிப்பிட்ட ஸ்தாபனம் மூலம் இரத்தம் கிடைத்ததால் உயிர் பிழைத்த பிள்ளைகளின் பெற்றோர் அனைவரும் வந்து தங்கள் நன்றியை சாட்சிமூலம் ஒவ்வொருவராக அறிவித்தனர். இரத்த தானம் செய்தவர்களை கண்ணீரோடு வாழ்த்தினார்கள். வந்தவர்கள் அத்தனை மக்களுக்கும் நற்செய்தி அறிவிக்க டாக்டர்.புஷ்பராஜ் ஆகிய என்னை அழைத்திருந்தார்கள். அவர்களுக்கு பொதுவான செய்தியை அறிவித்து இயேசுவின் இரத்தத்துடன் ஒப்பிட்டு மறைமுகமாக சுவிசேஷ செய்தியையும் கூறினேன். அதை **மதமாற்றம்** என்று தவறாக நினைத்துவிடக்கூடாது என்று ஞானத்தோடு பேச ஆவியானவர் எனக்கு அருள்புரிந்தார். இந்த நல்ல ஏற்பாடுகளை செய்த சகோ. N.L. Haritharan அவர்களோடு உள்ள குழுவினரையும் வாழ்த்துகிறேன். நாமும் **மரணத் தருவாயில்** உள்ள இரத்தம் தேவைப்படும் வியாதியஸ்தர்களுக்கு உயிர் காக்க இரத்தம் தானம் செய்வதன் மூலம் நமக்காக சிந்திய இயேசுகிறிஸ்துவையும் சந்தோஷப்படுத்தியவராவோம்.

# பெங்களூர்
# அகாப்பே சபை ஆண்டு விழா







பெங்களூர் அகாப்பே சபை பாஸ்டர்.**ரூபன்** அவர்கள் கஷ்டப்பட்டு உருவாக்கின மிகப்பெரிய சபை இது. பாஸ்டர் ரூபன் அவர்களை மற்ற அனைத்து சபை பாஸ்டர்களும் CSI ஆயர்களுக்குள்ளும் நல்ல மதிப்புண்டு.

ஆரம்ப காலத்தில் நான் **அந்தமான் தீவு** ஊழியங்களுக்கு சென்ற போது பாஸ்டர் ரூபன் அவர்கள் ஒரு மிஷனரியாக அங்கு ஊழியம் செய்தார். அப்போது **பேய் பங்களா** என்று பலர் பயந்த மூங்கில் பங்களாவில் நானும் பாஸ்டர் ரூபன் அவர்களும் தங்கினோம். மிக எளிமையாக தன் ஊழியத்தை ஆரம்பித்தவர். இன்று இவர் ஊழியம் ஆலமரம்போல் படர்ந்து வளர்ந்துள்ளது. சபை மக்கள், கிளை சபை மக்கள் யாவரும் பாஸ்டரை மிகவும் நேசிக்கின்றனர்.

இவர்களின் **சபை நாள்** கன்வென்ஷனுக்கு அழைக்கப்பட்டு கர்த்தருடைய செய்தியை பகிர்ந்துகொண்டேன். கர்த்தர் நாமம் மகிமைப்பட்டது. இவர் மகன் பாஸ்டர்.Rev.ஜிம்எலியட் அவர்கள் அமெரிக்கா சென்று முறைப்படி வேதாகம கல்லூரியில் படித்து,பாஸ்டர்.ரூபன் அவர்களுக்கும் இவர் நடத்தும் வேதாகம கல்லூரியிலும் பொருப்பெடுத்து ஊழியம் நிறைவேற்றுகிறார். கர்த்தர் தாமே பாஸ்டர்.ரூபன் அவர்களையும், அவரின் குடும்பத்தையும்,சபை மக்களையும், ஸ்தாபனத்தையும் ஆசீர்வதிப்பாராக.

# பிஷப் தெரிந்தெடுப்பு

வேதத்தில் (1இராஜ 13:33,34)ல் **யெரொபெயாம் ராஜா** என்பவன் ஜனங்களில் **ஈனமானவர்களை... ஆசாரியராக்கி ஊழியம்** செய்ய வைத்தான். 34ம் வசனத்தில் இந்த காரியம் அந்த **மக்களுக்கு பாவமாயிற்று** என்று எழுதியிருக்கிறது.

பழைய ஏற்பாட்டு காலத்தில் ராஜாக்கள் ஆலயத்துக்கு ஊழியம் செய்ய தங்களுக்கு சாதகமாக இருப்பவர்களை சாட்சியில்லாத **ஈனமானவர்களை** தெரிந்தெடுத்ததைப்போல இப்போது புதிய ஏற்பாட்டு சபையின் **புரொட்டஸ்டன்ட்** கிறிஸ்தவ சபைகளில் CSI, லூத்தரன், மார்தோமா சபைகளிலும் இப்படிப்பட்ட ஊழியங்களுக்கு சாட்சியில்லாதவர்களை **சபை தலைமை மேய்ப்பனாக** தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

இப்படி நான் தவறுகளை **ஜாமக்காரனில்** சுட்டிக்காட்டி எழுதுவதால் இப்போது பல பிஷப்மார்கள் என்னை வெறுக்கிறார்கள். என் கூட்டங்களில் தலைமை வகிக்க இஷ்டப்படுகிற தில்லை. என்னை தங்கள் டையோசிஸ்ஸில் பிரசங்கிக்க அனுமதி மறுக்கிறார்கள். தவறு செய்த பிஷப்மார், பிரச்சனைகளில் அகப்பட்ட பிஷப்மார் என்னை வெறுப்பதில் நியாயம் உண்டு. தவறே செய்யாத **பிஷப்மார்கூட** என்னை தங்கள் டையோசிஸ் கூட்டங்களுக்கு அழைக்க பயப்படுகிறார்கள். ஆயர்கள் என்னை காணும்போது என்னோடு பேச பயப்படுகிறார்கள். ஒரு புன்சிரிப்புகூட கிடையாது. யாராவது டாக்டரோடு இந்த ஆயர் நெருக்கமான தொடர்பு வைத்திருக்கிறார் என்று பிஷப்பிடம் கூறி **பிஷப்பின் வெறுப்புக்கு ஆளாகிவிடுவோமோ** அதனால் தங்கள் பதவிக்கு ஆபத்து வருமோ என்ற பயம் அவர்களுக்கு உண்டாகிறது. என்னை அங்கிள்(Uncle), அண்ணன், ஐயா என்று நெருக்கமான உறவோடு பேசியவர்கள்கூட என்னோடு பேச பயப்படுவதை கண்டு அவர்களை நினைத்து சிரிப்பதா? பரிதாபப்படுவதா? என்று புரியவில்லை. என்னோடு ஜெபத்தொடர்பு கொண்டு வேத இரகசியங்களை கேட்டு பகிர்ந்துக் கொண்டு ஜெபிக்க விரும்பிய நல்ல ஆவிக்குரிய ஆயர்கள்கூட தங்கள் தொடர்புக்கு அப்பால் என்னை காண ஆசைப்படுகிறார்கள்.

ஆனால் நான் என் ஜெபத்தை அவர்களுக்காகவும், நான் சென்ற அனைத்து டையோசிஸ்களுக்காகவும், பிஷப்மார்களுக்காகவும், ஆயர்களுக்காகவும் ஜெபிப்பதை நிறுத்தவில்லை.

என் **உள்ளத்தின் பாரம் எல்லாம் CSI, லூத்தரன், மார்தோமா** சபைகள் இரட்சிக்கப்பட வேண்டும். மற்ற சபைகள் குறித்தும் பாரம் உண்டு. என்றாலும் மேலே குறிப்பிட்ட 3 மெயின் லைன் சபைகளோடுதான் 42 வருடமாக எனக்கு பழக்கமும், நெருக்கமும் உண்டு. ஆகவே அதை குறித்த பாரம் எனக்கு அதிகமாக இருக்கிறது.

அதனால்தான் **மார்டின் லூத்தரின் 500வது ஆண்டு நினைவு** நாட்களில் மெயின் லைன் சபைகள் குறிப்பாக CSI சபைகள் **புதிய சீர்திருத்தம்** பெறவேண்டும் என்று எழுதுகிறேன்.

சபை கமிட்டி எலக்ஷன் முதல் பிஷப் எலக்ஷன் வரை பெரும் சீர்திருத்தம் CSI க்குள்

!



வரவேண்டும். சபை தலைமை **பிஷப்** பொறுப்பு கர்த்தரால் தெரிந்தெடுக்கப்படுவது என்பார்கள். நிச்சயமாக இப்போது அப்படியில்லை!. தவறான பிஷப்புகள் கர்த்தரால் அனுமதிக்கப் படுவதாகும். தகுதியில்லாதவர்கள் மெஜாரிட்டியினால் அல்லது லஞ்ஜமாக பெரும் தொகை கொடுத்து பிஷப் பதவியை விலைக்கு வாங்கிவிடுகிறார்கள். அதன்பின் திருமண்டலம் எப்படியிருக்கும் என்று யோசித்துப்பாருங்கள்?

அறிஞர் அண்ணா கூறினார் **"தம்பி ! பதவிதான் உன்னை தேடிவரவேண்டும். நீ பதவியை தேடி போகக்கூடாது"** என்றார்.



உதாரணமாக, 2017 கடந்த செப்டம்பர் மாதம் **கொல்லம்-கொட்டாரகரா** CSI புதிய டையோசிஸ்க்கு **பிஷப்** தெரிந்தெடுக்கப்பட்டார். இவரை கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டவர் என்று கூறமுடியாது. காரணம் அவர்தான் பிஷப் பதவிக்காக பல காலம் பல டையோசிஸ்களுக்கு அலைந்தவர். மத்திய கேரளா CSI டையோசிஸ்ஸை சேர்ந்தவரான அவர் இப்போதுள்ள **மாடரேட்டர்** அன்று பிஷப் ஸ்தானத்துக்கு எலக்ஷனில் நின்றபோது இவரும் அவருக்கு எதிராக போட்டியிட்டவர் ஆகும். **இயேசு அழைக்கிறார்** சகோ.பால்தினகரரோடு தொடர்புள்ளவர் ஜெயித்துவிடுவார் என்ற **தீர்க்கதரிசனமும்** இவருக்காக உரைக்கப்பட்டது. ஆனால் இவரோ **தோற்றுப் போனார்.**

**இரண்டாவது முயற்சி :** வடக்கு கேரளா (North Kerala) டையோசிஸ் பிஷப் எலக்ஷனுக்காக கோட்டயத்தை விட்டு **கள்ளிகோட்டை** சென்று எலக்ஷனில் நின்றார். அரசியல்வாதிகள் தாங்கள் பிறந்து வளர்ந்த தொகுதியில் தோற்றால் வேறு ஊரில் சென்று கட்சியின் துணையுடன் எலக்ஷனில் நிற்பதுபோல் இவரும் வடக்கு கேரளா பிஷப் எலக்ஷனில் நின்றார். இங்கும் இவர் 3வது நிலையில் ஓட்டுஎண்ணிக்கையில் குறைந்தஓட்டு வாங்கி தோற்றுப் போனார். ஆனால் மாடரேட்டருக்குள்ள **வீட்டோ (அதிகாரம்) பவர், மெரிட்** என்ற அடிப்படையில் குறுக்குவழியில் அவரை ஜெயிக்கவைக்க இப்போதுள்ள மாடரேட்டர் மிகவும் முயன்றார்.

ஜாமக்காரனில் அந்த குறுக்குவழி விபரம் நான் எழுதி அறிவித்ததால் வடக்கு கேரளா டையோசிஸ் அனைத்து சபை தலைவர்களும் அதிகம் வாக்கு வித்தியாசத்தில் ஜெயித்த ஆயர் அவர்களை **பிஷப்** ஆக்காவிட்டால் சினாட் கட்டாயப்படுத்தும் எந்த ஒரு பிஷப்பையும் நாங்கள் ஏற்க மாட்டோம். கோர்ட்டுக்கு போவோம் என்று அத்தனைபேரும் தங்கள் முழுவிலாசத்தையும் எழுதி கையெழுத்திட்டு மனு ஒன்றை இப்போதுள்ள மாடரேட்டருக்கும்,நீதிமன்றத்துக்கும் அனுப்பி வைத்தனர். அவ்வளவுதான் பெரும்அளவு ஆதரவுள்ள ஆயரையே மாடரேட்டர் அவர்கள் வேறு வழி இல்லாமல் பிஷப்பாக நியமித்து,மேலும் அவர்கள் விருப்பப்படியே **வடக்கு கேரளா டையோசிஸ்** என்ற பெயரையும் நீக்கி **மலபார் டையோசிஸ்**(CSI) என்று பெயர் மாற்றமும் செய்தார். ஆனால் **கொல்லம்-கொட்டாரகரா** CSI டையோசிஸ் மக்களும் இவர்களைபோல் முயன்றார்கள். ஆனால் மாடரேட்டர் பிடிவாதமாக **Rev.உம்மன் ஜார்ஜ்** ஆயரையே பிஷப் ஆக்கி அவரின் மூன்றாம் முறை முயற்சியை வெற்றிபெற செய்தார். கவனியுங்கள். இந்த ஆயர் 3 முறை பிஷப் பதவிக்காக பெரும்தொயையுடன் முயற்சிசெய்து கடைசியில் மாடரேட்டர் முயற்சியால் **பிஷப் ஆக்கப்பட்டார்** என்றால் இது நம் **தெய்வத்தின் தெரிந்தெடுப்பா**? இந்த **ஆயரின் கடின**

**முயற்சியும்,பணமும்,சிபாரிசும்தானே** இவரை **பிஷப்பாக்கியது.** கர்த்தரின் ஆசீர்வாதம் பிஷப் மீதும் அந்த டையோசிஸ் மீதும் இருக்குமா?என்றாலும் நாம் அந்த புதிய டையோசிஸ்காகவும், பிஷப்புக்காகவும் ஜெபிக்க வேண்டியது நம் கடமையாகும். இதை வாசிக்கும் வாசகர்கள் CSI சபை மக்கள், பிஷப்மார்கள், ஆயர்கள் யாவருக்குள்ளும் ஒரு பெரும் சீர்திருத்தமும், ஆவிக்குரிய மாற்றமும் உண்டாகவேண்டும். அதற்காகத்தான் நாம் யாரும் குறிப்பாக CSI சபை மக்கள் யாவரும் ஆங்காங்கே கூடி ஜெபம் ஏறெடுங்கள். காலம் மாறமாற எல்லா சபைக்குள்ளும் பிரச்சனைகள் முன்பைவிட கூடத்தான் செய்யும். காரணம் பிசாசுக்கு தன் முடிவுகாலம் மிக நெருங்கிவிட்டது என்றும், தனக்கு இன்னும் **கொஞ்ச காலம்தான்** உண்டு என்று அறிந்து முன்பைவிட தீவிரமாக சபைகளை சீர்குலைத்துபோட்டு மக்களை வசனத்திலிருந்தும், கர்த்தரிடமிருந்தும் முற்றிலுமாக நீக்க முயலுவான். அவரவர் தங்களுடைய ஆத்துமாக்களை ஜாக்கிறதையாக பார்த்துக்கொள்ளுங்கள். கர்த்தரின் வருகையும் மிக சமீபமாக இருக்கிறது. மாரநாதா!

# முக்கிய அறிவிப்பு:

கீழே குறிப்பிடும் இரண்டு வங்கிகளின் மூலமாக வாசகர்களின் பணபரிவர்த்தனைகள் குறைந்ததால் மூன்று வங்கி தொடர்பை நிறுத்திவிட்டோம். **1). Syndicate Bank, 2). State Bank of Travangore, 3). IOB - Indian Overseas Bank.** ஆகவே வாசகர்கள் இந்த வங்கி மூலமாக எந்த காணிக்கையும் அனுப்பவேண்டாம் என்று அறிவிக்கிறேன். வழமையாக கீழே உள்ள வங்கிகள் வழியாக ஆன்-லைன் மூலமாகவோ,காசோலையோ,டிடி மூலமாகவோ காணிக்கை அனுப்பலாம் என்று அறிவித்துக்கொள்கிறேன். காணிக்கை அனுப்ப தொடர்புக்கொள்ளவேண்டிய வங்கிகள்:

பெயர் : **M.G.E.PUSHPARAJ**

1). வங்கி பெயர்: **SBI- STATE BANK OF INDIA,**

**SRIRANGAPALAYAM BRANCH - SALEM -1970.**

**A/C NO.10764116842**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப:

**SWIFT CODE: SBININBB637 - 10764116842**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப:

**IFSC CODE: SBIN0001970- 10764116842**

2). வங்கி பெயர்: **CANARA BANK- SURAMANGALAM BRANCH - 1219**

**A/C No.1219101013622**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப:

**SWIFT CODE: CNRBINBBSLM - 1219101013622**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப:

**IFSC CODE: CNRB0001219 - 1219101013622**

# வாசகர் கடிதம்:1

**2017 மே மாதம்** ஜாமக்காரனில் கேன்சர் வியாதி சுகம் கிடைக்காத அந்த 2வது சாட்சி எழுதியவரின் ஆத்மீக தைரியமும் அவர் தன்னை தேற்றிக்கொண்ட விதம் சூப்பர்ப்!. அப்படிப்பட்ட உண்மை சாட்சிகளை நான் இதுவரை எந்த கிறிஸ்தவ பத்திரிக்கைகளிலும் கண்டதில்லை. எல்லாரும் சுகம் பெற்றதைத்தான் போட்டோவுடன் எழுதுவார்கள். உங்கள் பத்திரிக்கை மிக வித்தியாசமானது.

அந்த சாட்சி என்னைப்போல சுகமாகாத வியாதியை சரீரத்தில் சுமந்துக் கொண்டிருப்பவர்களுக்கு **பெரும் உற்சாகத்தை** அளித்தது. ஒரு பிரசங்கத்தைவிட அந்த சகோதரியின் சாட்சிதான் என்னை பெலப்படுத்தியது. அவர் போன் நெம்பர் மட்டும் எனக்கு எழுதி அனுப்புங்கள்.

1). பாஸ்டர்.**வால்டர்பிரபு, கோலார்- கர்நாடகா**

**2). Rev. Varghis K. Varghis**

Kottayam. (Kerala).

(மேலே குறிப்பிட்ட இரண்டு நபர்களும் ஒரே மாதிரி ஒரு சில மாற்றங்களோடு இந்த சாட்சி கடிதம் எழுதியுள்ளார்கள். எழுதிய விஷயம் ஒன்றாக இருந்ததால் ஒரு கடிதத்தை மட்டும் இங்கு வெளியிட்டேன்).

# வாசகர் கடிதம் : 2:

டாக்டர் நீங்கள் தொலைபேசியில் என்னோடு பேசி எனக்காக ஜெபித்து என்னை கண்டிப்பாக டிகிரி முடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டீர்கள்.

எனக்கு வயது 50 ஆகிறது. இந்த வயதில் எப்படி படிப்பேன் என்று மனதுக்கு கஷ்டமாக இருந்தது. என்றாலும் நீங்கள் கூறியதால் படித்தேன், பரீட்சை எழுதினேன். கர்த்தருடைய கிருபையால் **பிஏ** படித்து வெற்றியும் பெற்றுவிட்டேன். ஜெபித்து ஆலோசனை அளித்து உற்சாகப்படுத்திய உங்களுக்கு நன்றி.

**எஸ்.ஷோபா**

குமரபுரம். கன்னியாகுமரி.

# வாசகர் கடிதம் : 3:

2017 மே மாத ஜாமக்காரனில் எழுதப்பட்ட சாட்சியை குறித்து வந்த விமர்சன கடிதம்

உங்கள் உபவாச ஜெப கூட்டத்தில் கலந்துகொண்டு நீங்கள் ஜெபித்து சுகம்பெற்ற ஏராளமானவர்களை பல வருடங்களுக்குமுன்பே நான் அறிவேன். இப்போதைய ஊழியர்களின் பத்திரிகைகளிலும் அவர்கள் பிரசங்க மேடைகளிலும் மாயமாலமான சாட்சிகளை ஏராளமாக வெளியிடுகிறார்கள். மேடையிலும் அப்படிப்பட்ட பொய்சாட்சி கூறுகிறார்கள்.

ஆனால் உங்கள் ஜாமக்காரனில் மட்டும் குறிப்பாக **மே** மாத ஜாமக்காரனில் ஜெபித்தும் **சுகம் கிடைக்காத** ஒரு சதேகாதரியின் சாட்சியை என் வாழ்க்கையில் முதன்முதல் வாசித்தேன். சுகம் பெறாத அந்த சகோதரியின் சாட்சியை வேறு ஊழியர்கள் யாராவது அப்படி தைரியமாக வெளியிட்டிருக்கிறார்களா? என்று என் மனைவியிடம் கேட்டேன். அவள் தான் எங்கள் வீட்டில் ஜாமக்காரனை முதலில் வாசிப்பாள் அவள் கூறினாள் ஜாமக்காரனை வாசித்துப்பாருங்கள் என்றாள். உடனே ஜாமகாரனை வாங்கி வாசித்தேன்.

அதில்தான் மேலே குறிப்பிட்ட அந்த சாட்சியை வாசித்தேன். அதை எழுதிய சகோதரிக்கு கேன்சர் வியாதி அதற்காக அவள் ஜெபித்தும், உங்கள் உபவாச ஜெபத்தில் நீங்கள் ஜெபித்தும் கேன்சர் சுகமாக வில்லைதான். ஆனால் அதை அந்த சகோதரி எழுதிய விதம் ஆச்சரியப்பட வைத்தது. அந்த வியாதியில் **சுகம் கிடைக்காவிட்டாலும்** அந்த பெண் இயேசுவை நான் என் **மரணம் வரை நேசிப்பேன்** என்று எழுதிய அந்த பெண்ணின் அற்புதமான ஜீவனுள்ள சாட்சி எனக்கு கண்ணீரை வரவழைத்தது. அதை வெளியிட்டதற்கு நன்றி. **சுகமாதவர்களின் சாட்சியும்** அதன் காரணமும் எழுதிய ஒரே பத்திரிகை ஜாமக்காரன்மட்டும்தான் என்று அறியும்போது எங்களுக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது. நீங்கள் ஒரு ஆவிக்குரிய புரட்சியாளன் ஆகும். கடந்த 29 வருடமாக என் மனைவி உங்கள் ஜாமக்காரனை வாசிக்கிறார். ஆனால் ஒரு முறைகூட அதற்கு நாங்கள் காணிக்கை அனுப்பவேயில்லை! கடந்த 29 வருடமாக ஏன் காணிக்கை அனுப்பவில்லை என்றால் ஜாமக்காரன் மற்றவர்களைக் குற்றம் கூறுகிறவர். ஆகவே அவருக்கு **காணிக்கை அனுப்பாதே** என்று நான் கூறியதால் என் மனைவி உங்களுக்கு அனுப்பவில்லை. நான் கட்டளையிட்டதை மீறி காணிக்கை அனுப்பினால் நான் கோபப்படுவேன் என்று என் மனைவி அறிந்து காணிக்கை அனுப்பாமல் மனவேதனையுடன் இருந்தாள்.

இந்த குறிப்பிட்ட சாட்சியை வாசித்தபின் உங்கள் **நேர்மையான விமர்சனத்தை** விளங்கிக்கொண்டேன். இத்துடன் உங்கள் உண்மையான ஊழியத்தையும் விளங்கிக் கொண்டேன். உங்கள் பழைய ஜாமக்காரனை எல்லாம் எடுத்து வாசித்தேன். இந்த முறைதான் முதன்முதல் உங்களுக்கு காணிக்கை அனுப்புகிறோம். இனி ஒவ்வொரு மாதமும் அனுப்புவோம். ஜாமக்காரனின் பல வருடங்களுக்கு முந்தைய பழைய பத்திரிகைகளை இப்போது வாசிக்க தொடங்கியிருக்கிறேன். வேதத்தில் பல நல்ல விஷயங்களை இத்தனை ஆண்டுகளாக அறியாமல்போனேனே!. அப்போதே ஜாமக்காரனை வாசித்திருந்தால் என்னில் பல மாற்றங்கள் எப்போதோ உண்டாகியிருக்குமே!. எப்படியோ இனி தொடர்ந்து நான் ஜாமக்காரனை வாசிப்பேன். உங்கள் வாசகர் குடும்பத்தில் எங்களையும் இணைத்துக்கொள்ளுங்கள். நன்றி.ஐயா, ஜாமக்காரனுக்கும் நன்றி. **- வேதாரண்யம் (தமிழ்நாடு).**

## ஊழியர்கள் உடலில் அரிசி அளவில் "சிப்"

அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள "த்ரீ ஸ்கொயர்ஸ்" எனும் நிறுவனம் ஊழியர்களின் உடலில் அரிசி அளவிலான சிப் ஒன்றைப்பொருத்தும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. ஊழியர்களின் கைகளில் பொருத்தப்படும் இந்த எலக்ட்ரானிக் சிப் மூலம் நிறுவனத்தின் முன் கதவுகளை சாவிகள் உதவியின்றி திறக்கலாம் என்றும்,கேன்டீனில் கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்தாமல் ஸ்நாக்ஸ் உள்ளிட்டவைகளை வாங்கலாம் என்றும் கூறியுள்ளது. இந்த திட்டத்தில் இணைவது கட்டாயமாக்கப்படவில்லை என்று கூறியுள்ள அந்த நிறுவனம் இந்த புதிய திட்டத்தில் இதுவரை 50 ஊழியர்கள் இணைந்துள்ளதாகவும் கூறியுள்ளது. அதே நேரம் ஊழியர்களின் உடலில் பொருத்தப்படும் சிப்களில் அவர்களைக் கண்காணிக்கும் வகையிலான ஜிபிஎஸ் தொழில் நுட்பம் சேர்க்கப்படவில்லை என்றும், அது நிரந்தரமாக கைகளில் இடம்பெற்றிருக்கப்போவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊழியர்கள் விரும்பும் நேரத்தில் அந்த சிப்பை வெளியில் எடுத்துக்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் த்ரீ ஸ்கொயர்ஸ் நிறுவனம் கூறியுள்ளது. அமெரிக்காவில் ஊழியர்கள் உடலில் சிப் பொருத்தும் இதுபோன்ற திட்டத்தை கொண்டு வரும் முதல் நிறுவனம் இதுவே.

# மரண அறிவிப்பு
# கர்த்தருக்குள் மரித்தார்



திருப்பத்தூர் அடுத்து **காரப்பட்டு** என்ற கிராமத்தில் வசிக்கும் சகோ **G.பால்ராஜ்** அவர்கள் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர். 2017 ஆகஸ்ட் மாதம் 24ம் தேதி திடீரென்று ஏற்பட்ட இருதய பாதிப்பால் மரித்துப்போனார்.

ஆத்மஆதாய பணியிலும்,மிஷனரி ஊழியத்திலும் மிகவும் பாரமுள்ளவர். மிஷனரி பணிக்காக பல்வேறு விதங்களில் குறிப்பாக FMPB மிஷனரி பணிக்காக தன்னையே அற்பனித்தவர். ஆசிரியர் பணியில் **ஓய்வுபெற்றபின்** ஊழிய பாரத்தோடு மிகவும் அலைந்தவர். சுற்றிலும் உள்ள அனைத்து சபையினரும் அவரை மிகவும் மதிப்பார்கள். என் ஊழியத்திலும் குறிப்பாக ஊத்தங்கரை கிராம சபை ஊழியத்திலும் பெரும் பங்காற்றியவர். அனைத்து சபையினரும் அவரிடம் ஆலோசனை கேட்டு ஜெபிக்க அவர்களிடம் வருவார்கள்.

**நடக்க இயலாத** நிலையில் உள்ள தன்மனைவிக்கு **சகோ.பால்ராஜ்** அவர்கள் ஒரு ஊன்றுகோலாக இருந்து தன் மனைவிக்கு சந்தோஷத்தோடு சேவை செய்தவர். இத்தனைக்கும் இவர் தன் சரீரத்திலேயே நிறைய பெலவீனமும், நடக்க இயலாத நிலையில் கால் வீங்கியிருந்தும் யார் ஜெபத்துக்கு என்று இவரை அழைத்தாலும் தன் **சிறு மோட்டார்** சைக்கிள்(TVS) வண்டியில் ஜெபிக்க சென்றுவிடுவார். இவருடைய இழப்பு அவரை சுற்றியுள்ள கிராம மக்களுக்கும், மிஷனரி பணிக்கும் பெரிய இழப்பாகும்.

**மனைவி திருமதி.அற்புதம்** (ஓய்வு பெற்ற ஆசிரியை) பிள்ளைகள். ஒரு மகன், இரண்டு பெண் பிள்ளைகள் அவர்களின் குடும்பம் யாவருக்கும் கர்த்தர் ஆறுதல் அளிப்பாராக.

சகோ.**பால்ராஜ்** அவர்களில் சாட்சியுள்ள ஆவிக்குரிய வாழ்க்கைக்காக நான் தேவனை துதிக்கிறேன். இப்படிப்பட்டவர்களின் மரணம் கர்த்தரின் பார்வையில் விலையேறப்பெற்றது.

## காணிக்கை

Online வழியாக மேலே கூறிய இரண்டு வங்கிகளுக்கு காணிக்கை அனுப்பியவர்கள் E-mail அல்லது கடிதம் அல்லது தொலைபேசி வழியாக பணம் அனுப்பிய விவரங்களை அறிவிக்க கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் பணம் அனுப்பியது யார்? என்ற விவரம் அறிய இயலும். அனுப்பியவர் பெயர், விலாசம், தொலைபேசி எண், அனுப்பிய தொகை எவ்வளவு, எந்த தேதியில் - மாதத்தில் அனுப்பினீர்கள் என்பதை மட்டும் தெரிவித்தால் காணிக்கை கிடைத்த விவரத்தை உங்களுக்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அறிவிக்க உதவியாக இருக்கும். மேலும் குறிப்பாக அனுப்பியவர்களின் குடும்பத்துக்காக ஜெபிக்கமுடியும். இந்த விஷயத்தில் ஒத்துழைப்பு தாருங்கள்.

சிலர் பணம் அனுப்பிய விவரம் தெரிவிக்காமல்போனால் அந்த தொகையை வங்கி பாஸ்புக்கில் பார்த்தவுடன் அந்த தொகைகை குறிப்பிட்டு உடனே ஜெபித்துவிடுகிறோம். சகலத்தையும் அறியும் தெய்வம் பணம் அனுப்பியவரையும் அறிவார். நிச்சயம் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

## புதிய டையோசிஸ் - புதிய பிஷப்:



**கொல்லம் - கொட்டாரக்கரா** சிஎஸ்ஐ டையோசிஸ்க்கு **முதல் பிஷப்** நியமிக்கப்பட்டார். தெற்கு கேரளா CSI டையோசிஸ் இரண்டாக பிரிக்கப்பட்டு **கொல்லம்-கொட்டாரக்கரா** CSI டையோசிஸ் என்று உருவாக்கப்பட்டு Rev.Dr.OOMMAN GEORGE என்பவரை 2017 செப்டம்பர் 10ம் தேதி கொல்லம் CSI சபையில் வைத்து, CSI மாடரேட்டர் Most.Rev.THOMAS K.OOMMAN அவர்களால் **பிஷப்பாக** பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டார். இவர் மத்திய கேரளா டையோசிஸ்ஸில் CLERGY SECRETARY ஆக பணியாற்றியவர்.

இவர் பிஷப் எலக்ஷனில் 3வது நபராக தெரிந்தெடுக்கப்பட்டவர். தேர்தலில் அதிக வாக்குகள் பெற்று 1வது நிலையில் இருந்த Rev.FRANKLIN அவர்களை மாடரேட்டர் தேர்ந்தெடுக்காமல், மாடரேட்டரின் **வீட்டோ** பவரை உபயோகித்து **மெரிட்** என்ற பெயரில் **Rev.உம்மன் ஜார்ஜ்** அவர்களை பிஷப்பாக நியமித்துள்ளார்கள். எப்படியோ பிஷப்பாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டபடியால் பிஷப் **Rt.Rev.உம்மன் ஜார்ஜ்** அவர்களை ஜாமக்காரன் பெயரிலும், என் பெயரிலும் அவரை வாழ்த்துகிறோம். அப்படியாக திருமண்டல பிஷப் ஸ்தானத்தில் புதிதாக தெரிந்தெடுக்கப்பட்டவரை வாழ்த்த வேண்டியது என் கடமையாகும். அது நாகரீகமும் ஆகும். கர்த்தர்தாமே கொட்டாரக்கார CSI டையோசிஸ் மக்களை ஆசீர்வதிப்பாராக.

**OCTOBER 2017**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.